உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 25 ஞாயிற்றுக்கிழமை (11.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 345

# சமாதானக் கதவுகளை படக்கென அடித்து மூடிவிட்டது படுகொலை!

## தமிழ்ச்செல்வனின் இழப்புக் குறித்து பிரி.நாடாளுமன்றக் குழு கண்டனம்

லண்டன்,நவம்பர் 11

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலை, இலங்கையில் சமாதானத்தை கொண்டுவருவதற்கான பாதையின் மற்றொரு கதவையும் படக்கென அடித்து மூடிவிட்டது.

இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய இலங்கைத் தமிழர் விவகாரத்துக்கான குழு.

தமிழ்ச்செல்வன் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட சமாதானப் பேச்சாளராக விளங்கினார். இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக சர்வதேச சமூகத்தின் பிரதான தொடர்பாளராகவும் அவர் திகழ்ந்தார் - என்றும்

இலங்கைத் தமிழர் விவகாரத்துக்கான பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சி குழு தனது கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

அக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலமாக இலங்கையில் வன் செயல்கள் மிகமிக உயர்ந்துள்ளன. கடந்த வருட ஆரம்பத்தில் இருந்து 5ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் குழுவின் சார்பில் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

சமாதான விரும்பிகளுடன் இணைந்து தமிழ்ச்செல்வனின் படுகொலையை அனைத்துக் கட்சிக் குழு கண்டிக்கின்றது. தமிழர் அல்லது சிங்களவர் யாராக இருந்தாலும் கொலைகளை அனுமதிக்கமுடியாது.

சகலராலும் ஏற்கக்கூடிய சமாதான பேச்சாளரான தமிழ்ச்செல்வன், இலங்கையின் சமாதான முயற்சியில் சர்வதேச சமூகத்துடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம்

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்



கொழும்பு,நவ.11

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் யுத்தத்துக்கான நிகழ்ச்சி நிரலுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. சமாதானத்துக்கான - பேச்சுக்கான - நிகழ்ச்சி நிரலுடன் தயாரிக்கப் படவில்லை.

யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'தநேசன்' ஆங்கில வார இதழுக்கு மின்னஞ்சல் மூலம் அளித்த பேட்டியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு-

சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுக்களில் அக்கறை காட்டி வருகின்றது. ஆனால் இலங்கை அரசு யுத்தத்திலேயே நாட்டம் கொண்டுள்ளது. அரச தரப்பில் இருந்து வரும் கருத்துக்கள் அந்தச் செய்தியையே சொல்கின்றன.

அரசு சமாதான வழிமுறையில் அக்கறை காட்டாதபோதிலும் சர்வதேசத்தின் கோரிக்கையின் பேரில் நாம் சமாதானதச் செயற்பாடுகளில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

எமது போராட்டம் மக்களின் விடுதலைக்கான - அதன் சுதந்திரத்துக்கான - போராட்டம். எந்த விதமான தடைகளை எதிர்நோக்கினாலும் எமது விடுதலைக்கான சுதந்திரத்துக்கான போராட்டம் தொடரும்.

1985,1986 காலப்பகுதியில் இந்தியாவில் நிலைகொண்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யால பகுதியில் நேற்று கிளைமோர் தாக்குதல்: ஒருவர் பலி!

கொழும்பு, நவ.11

யால வனவிலங்கு சரணாலயத்தில் இருந்த வேலையாள்களை ஏற்றிச் சென்ற 'குறூப் கப்' வாகனம் நேற்று மாலை 6.45 மணியளவில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

இத்தாக்குதலில் வாகனத்தில் சென்ற ஒருவர் கொல்லப்பட்டார் என்று படைத்தரப்பு தெரிவித்தது.

யால சரணாலயப் பிரதேசத்தில் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் -

மேலதிக படையினரும் பொலீஸாரும் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் - படைத்தரப்புத் தெரிவித்தது. (அ-1)

## இந்திய அமைச்சர் சிதம்பரம் இன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு, நவ.11

இந்திய நிதியமைச்சர் பி.சிதம்பரம் குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம மற்றும் முக்கிய தலைவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் கொலையை அடுத்து தமிழகத்தில் ஏற்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலை குறித்தும் அரசின் தீர்வு யோசனைகள் குறித்தும் இலங்கைத் தலைவர்கள் அவருடன் பேசுவர் என அறியப்படுகிறது.

கொழும்பில் இன்று நடைபெறும் லஷ்மன் கதிர்காமர் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் சிதம்பரம் பிரதான சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (அ-1)

## கடற்படைக்கு ஆயுதம் வழங்கியமை மனித உரிமை மீறலை நியாயப்படுத்தாது

### அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் கருத்து

கொழும்பு,நவ.11

இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா கடற்கண்காணிப்புத் தளபாடங்கள் வழங்கியதால் இந்த நாட்டு அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை அது நியாயப்படுத்துவதாக அமையாது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் துதரக வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன.

இது தொடர்பாக தூதரகத்தின் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில் -

மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அமெரிக்கா இலங்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

அமெரிக்காவினால் 97ஆம் ஆண்டில் பயங்கரவாத அமைப்பென வகைப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் போக்குவரத்தை கட்டுப்படுத்தவே கடற்படைக்கு உதவிகள் வழங்கப்பட்டன. - என்றார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுக்கு அஞ்சலி செலுத்தி கோவையில் நேற்று வீரவணக்க ஊர்வலம்

சென்னை,நவ.11

விமானத் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்ட பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கோயம்புத்தூரில் நேற்று வீரவணக்க ஊர்வலம் இடம் பெற்றது.

கோவை சிவானந்தா காலனி மின்வாரியம் நிலையம் அலுவலகத்தின் முன்பாக இருந்து வீரவணக்க ஊர்வலம் மாலை ஆரம்பமானது.

பெரியார் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருஷ்ணன் தலைமையில் நடந்த இந்த ஊர்வலத்தில் பல நூற்றுக் கணக்கானோர் பங்குபற்றினர்.

'இலங்கை அரசுக்கு விமானங்கள், ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்து!'

'எங்கள் தமிழரை கொல்லக் கொடுக்காதே', 'வீரமறவர் தமிழ்ச்செல்வனுக்கு வீர வணக்கம்' போன்ற கோஷங்கள் ஊர் வலத்தில் எழுப்பப்பட்டன.

பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, தமிழ் தேசிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கு கிராமவாசிகளின் பாதுகாப்புக்காக 300 துப்பாகிகளை வழங்க அரசு ஏற்பாடு

கொழும்பு, நவ.11

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக கருதப்படும் தென்னிலங்கை சிங்களக்கிராமங்களுக்கு பொலீஸார் 300 துப்பாகிகளை வழங்கவிருக்கின்றனர். ரன்மினிதென்ன முதல் யால வரையும், கதிர்காமம் முதல் திஸ்ஸமகாராம வரையும் உள்ள பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கே ஆயுதங்கள் வழங்கப் படவுள்ளன. இது வரைகாலமும் வடக்கு, கிழக்கு எல்லையில் உள்ள கிராமவாசிகளுக்கே அரசு ஆயுதங்களை வழங்கி இருந்தது. தெற்கு கிராமவாசிகளுக்கு பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்குவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் பிரதேச மக்களுக்கு சுமார் 300 துப்பாக்கிகள் வழங்கப்படவிருப்பதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இராணுவ அதிகாரி பிரிகேடியர் சுகந்த ரணசிங்க கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட், சேவல் என்பன விற்பனைக்குண்டு.

1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K. FARM, K.K.S. றோட், சுன்னாகம், கொமர்ஷல் பாங் அருகில்.

## தேவை

C.D.M.A. அல்லது R.L- SUNTELL தொலைபேசிகள் தேவைப்படுகின்றன.

திருமதி R.இராமலிங்கம்,
No. 6, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 0212222317,
0773564288, 0776162343.

## வேலை ஆள்கள் தேவை

அனுபவமுள்ள தொலைத்தொடர்பு நிலைய ஊழியர் தேவை. யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் நேரில் வரவும்.

திருமுருகன் கொம் நெற்,
259,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு அறை தேவை

யாழ்.நகரை அண்மித்ததாகவும் பேருந்துகள், சிற்றூர்திகள், போக்குவரத்து வீதிகளில் அமைந்துள்ளதாகவும் உப அலுவலக பயன்பாட்டிற்கேற்றதான அறை வாடகைக்குத் தேவை.

தொடர்புகள்: அருள் முருகன்
03,யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 2229334.

## விற்பனைக்கு

தொலைத் தொடர்பு நிலையத்துக்கான சகல உபகரணங்களும், தொலைபேசி இணைப்பும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: .S.கனகலிங்கம்,
259,K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7835.

## தவறிவிட்டது

போதகர் கதிரவேலு சந்திரேஸ்வரன் என்பவருடைய தேசிய அட்டை (இல.551032850V) மோ.சைக்கிள் ஆவணங்கள், மோ.சைக்கிள் லைசென்ஸ், தொழில் அட்டை, H.N.B.வங்கி அட்டை என்பன கோப்பாய்ச் சந்திக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், " எக்காளத் தொனி சபை", இல. 21, கச்சேரி நல்லூரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் கொடுத்துதவவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்).

## கோழி இறைச்சி விற்பனை

நிறைகூடிய புறொயிலர், ஊர்ச்சாவல் என்பன வேண்டிய நிறைகளில் எந்த நேரமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: மல்ரிபாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்.

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி மகாத்மா வீதி சந்திக்கும் கும்பழாவளை விநாயகர் ஆலயத்திற்கும் இடையில் நல்ல சூழலில் 3 பரப்புக் காணி புதிய வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

தொடர்பு: வி.குமார் (பந்தல் குமார்),
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

## தவறிவிட்டது

77, பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுஜிதா கணேசலிங்கத்தின் 876731037V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறித்த முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## நீரிழிவு நிவாரணி

சிறுகுறிஞ்சா (Gymnema) இலைப்பவுடர் குருதிக் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் குறைக்கும். செயல் இழந்த இன்சுலின் தயாரிக்கும் B கலங்களை உயிர்ப்பிக்கும். இதன் பயனாக நீரிழிவைக் கட்டுப்படுத்துவதுடன் குணமாக்கும்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்க,
புதிய விலை- 100g ~~250~~ ரூபா 200/=

**BIO TEC**

131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(67564) T.P.: 021 4590907.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, கனடா PR உடைய, 1981 இல் பிறந்த, 12 இல் செவ்வாய், பூசம், 2 ஆம் பாதம், 28 3/4 கிரகபாவம் உடைய மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: 021222 3772.

## தவறிவிட்டது

மீசாலை மேற்கைச் சேர்ந்த மா.சிறிரவிகுலன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் (N.P.JU 4286) இராணுவ அனுமதி, காப்புறுதி,வரி அனுமதிப்பத்திரங்கள் மீசாலைக்கும் சாவகச்சேரிக்கும் இடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அ.கி.ஏரம்பமூர்த்தி, வங்களா வீதி, மீசாலைமேற்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## Mega Sales

**ATX Case with smps** 4750/=

**Hp Laser 1020** 20250/=

**Rams**

| | |
|---|---|
| DVD - Rw (Sony, Samsung) | - 5300/= |
| Combo Sony | - 4900/= |
| DVD-Rw Sony | - 5900/= |
| DVD-Rw light scribe (Asus) | - 5900/= |
| Combo Samsung | - 4400/= |

Intel Celeron D 3.06 GHz Processor
Core 2 Duo Support Mother board
256 DDR Ram, 40 Gb Sata HDD
Combo DVD/CD - Rw,
ATX Cats with SMPS
Key Board, Mouse.
Monitor CRT
39,999/=

Intel 3.0 GHz/2m Processor
Core 2 Duo Support Mother board
512 DDR 2, 80 GB HDD Sata
Combo DVD / CD - Rw
ATX Case with SMPS
Monitor CRT
49, 999/-

**Mother Board**

| | |
|---|---|
| Intel Orignal DDR 2 | - 12500/= |
| AsRock DDR 2 | - 7750/= |
| Fox Conn DDR 2 | - 7750/= |
| Asus 945 DDR 2 | - 9500/= |
| Asus P5s mxseDDR2 | - 7750/= |
| Asus DDR 1 | - 7600/= |
| AsRock DDR 1 | - 6500/= |

**Monitor**

| | |
|---|---|
| LCD (LG) | - 25500/= |
| 15" CRT | - 12750/= |
| 17" CRT | - 16500/= |

**CD**
banana A Grade
A/L A Grade
20/-

**VGA Caerd** 4250/=

**Hard Dicks**

| | |
|---|---|
| 80 GB Sata | - 6500/= |
| 160 GB Sata | - 7250/= |

**Key board** 550/=

**Opticol mouse** 600/=

**Wine less mouse** 1500/=

**Power Supply** 2400/=

**Hp desk set D1360** 6500/=

**Fox modem** 900/=

| | |
|---|---|
| Kingston 256mb DDR1 | - 2900/= |
| Kingston 512mb DDR 1 | - 4900/= |
| Kingston 256mb DDR2 | - 1900/= |
| Kingston 512 DDR 2 | - 2850/= |
| Kingston 1GB DDR 2 | - 4800/= |

**Processor**

| | |
|---|---|
| Intel Corel 2 Duo LGA | - 17500/= |
| Intel 3.0 GHz/2m LGA | - 9350/= |
| Intel Celeron 3.06 GHz LGA | - 6500/= |

**Creative 2.1** 4750/=

**Flash**

| | |
|---|---|
| 1 GB Kingston | - 1750/= |
| 2 GB Kingston | - 2900/= |

**Scanner** 8000/=

Warranty 1&3 Years With Services
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

**திருமுருகன் கொம் நெற்**

259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7835
(அல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் ...)

## உதைபந்தாட்டம்: இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, நவ.11

யாழ்ப்பாணம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் மானிப்பாய் றெட்றெஞ்சர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு கழக மைதானத்தில் பி.ப 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு.

* ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் யாழ்ப்பாணம் பாசையூர் பாடும் மீன் விளையாட்டுக் கழக 'சி' அணி.
* இளவாலை சென்.ஹென்றீஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக 'பி' அணி.

* * *

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினரால் இளையோர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலிகாமம் கல்வி வயப் பாடசாலை அணிகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் வருமாறு:-

* காலிறுதி ஆட்டம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
* அரையிறுதி ஆட்டம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
* மற்றைய அரையிறுதி ஆட்டம் - அராலி சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயம் எதிர் கால் இறுதியில் வெற்றிபெறும் அணி. (1-86)

## தவறிவிட்டது

188, கண்டிவீதி, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த பாலதுர்க்கா அமுதலிங்கம் என்பவரது தேசிய.அ.அ (825500359V), விசேட. அ.அ(091026816) என்பன (26.10.2007) சாவகச்சேரி காளிகோயிலுக்கும் வீட்டிற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் மணியம் பேப்பர் கடையில் ஒப்படைக்கவும்.

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை ஐயனார் கலட்டி முதலாவது ஒழுங்கை இல.65 இல் இரண்டு பரப்பில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
திருமதி
தி.சிவசுப்பிரமணியம்
72/8, பணிக்கர் வளவு,
திருநெல்வேலி.
தொலைபேசி
2227534

## 21ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**நாகமுத்து சிவப்பிரகாசம்**
மலர்வு 05.02.1918 உதிர்வு 03.10.1986
திதி: 11.11.2007

என்றும் உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றேன்.

சீரணி,
சண்டிலிப்பாய். (67854) மனைவி.

## டிஜிற்றல் கமரா உடன் தேவை



மிகவும் துல்லியமான முறையில் படங்களை எடுக்கக் கூடிய தரம் மிக்க - நல்ல நிலையில் உள்ள - குறைந்தது 5.1 Mega Pixels கொண்ட டிஜிற்றல் கமரா (Canon/ Sony/Nikon/ Exilim/ Samsung போன்ற ரகங்கள் விரும்பத்தக்கது) உடன் தேவைப்படுகின்றது.

கமராவுடன் அதிக படங்களை எடுக்கக்கூடிய கொள்ளவுடைய Memory Card கணனியுடன் இணைப்பதற்கான Software Cd, Cable, Battery, Charger என்பன இருக்க வேண்டும்.

தொடர்பு: 0714115002/0716850009/ 0212223837

## Aero Lanka

NEW WAY OF FLYING (PVT) Ltd.

**யாழ். கொழும்பு பயணிகள் சேவையும் பொதிகள் சேவையும்**

- ★ யாழ். - கொழும்பு பயணிகள் சேவையினை நடத்தும் ஏரோலங்கா நிறுவனத்தினர் பயணிகள் சேவையுடன் பொதிகள் சேவையினையும் நடத்துகின்றனர்.
- ★ உங்களின் பொதிகள் விரைவில் கொழும்பினை அடைய வேண்டுமா...? அதற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் ஏரோலங்கா
- ★ குறைந்த செலவில் விரைவான சேவையைப் பெற்றுக்கொள்ள ஏரோலங்கா
- ★ வாடிக்கையாளரின் நலன்கருதி சாவகச்சேரியில் இயங்கிய கிளை அலுவலகம் மீண்டும் தமது சேவையினை ஆரம்பித்துள்ளது.
- ★ எனவே விரையுங்கள்...

| இல.249A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-222 6242 Fax: 021 -222 5600 | தலைமை அலுவலகம் இல.500, காலி வீதி, கொழும்பு - 06 T.P.: 0112505633 0112505632 Fax: 0112500626 | இல.11, நவீன சந்தை (மேல்மாடி), சாவகச்சேரி. T.P.: 021-222 7979 Fax: 021 -222 7979 |
|---|---|---|

## மரண அறிவித்தல்கள்

### திருஞானம் அகிலன்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானம் அகிலன் 09.11.2007 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானம் - கமலம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற ரஞ்சிதமலர் மற்றும் யோகமலர், புஸ்ப ராணி, விக்னேஸ்வரன், பத்மசீலன், பாஸ்கரன், கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரனும் கந்தசாமி, காலஞ்சென்ற குமரேசன், தில்லையம்பலம், யோக ராணி, சியாமளவல்லி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வள்ளியம்மை, பொன்னம்மா, நாகமுத்து மற்றும் சௌந்தரம் ஆகியோரின் பெறாமகனும் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. : 0774161302
0773991038

தகவல்:
குடும்பத்தினர்.

### இராமநாதன் நாகலிங்கம் தியாகராஜா

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், நிலஅளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம் - வாழ்வகம்)



சரவணையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இ.நா தியாகராஜா நேற்று (10.11.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை அவரின் சகலனின் (மயில்வாகனம்) இல்லத்தில் பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அணிஞ்சில் பிள்ளையார் கோயிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி

தகவல்
நா.பா.நாகேஸ்வரன்
(மகன்)
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு இந்திய அரசு ஆயுதம் வழங்குகிறது; தமிழகத்தில் 6 ½ கோடி பேர் இளிச்சவாயர்களாக...!



*சென்னையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் கடந்த வாரம், செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான வீரவணக்க நிகழ்வில் சினிமா இயக்குநர் சீமான் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.*

இங்கே உள்ள சு.ப.தமிழ்ச்செல்வனின் புகைப் படத்தையும் அந்தப் புகைப்படத்தின் முன் னால் உள்ள பூக்களையும் பாருங்கள். புன்ன கைக்கும் பூக்களுக்கும் வித்தியாசம் தெரியாத அந்த முகத்தைப் பாருங்கள். தமிழண்ணா உங் கள் புன்னகையை எப்போது நாங்கள் பார்க் கப்போகிறோம் என்று ஏங்கித் தவிக்கிறோம்.

இந்த மண்ணிலே என் உடன் பிறந்தான் மரணத்துக்குக் கூட நாங்கள் கூடி அழமுடியா தாம். ஆனாலும் இது சுதந்திர இந்தியாவாம்!

எந்த நாடு உலகத்தில் அடிமைப்பட்டுக் கிடக் கிறதோ அந்த நாடெல்லாம் என் தாய் நாடு என் றார் சேகுவேரா. ஆனால், எங்கள் இரத்த சொந் தங்கள் அகதிகளாக அடிபட்டு இரத்தம் சிந்தி ஓடு கிறபோது நாங்கள் ஒன் றும் செய்யக்கூடாதாம். என் உடம்பிலும் கூட சுத்த தமிழ் இரத்தம் ஓடுவதாக ஒருவர் சொல்லியிருக்கிறார்.

தன்னைத் தமிழச்சி என்கிறார் 17 வருடங் களாத் தன் மகனை சிறைக்கொட்டடி யிலே விட்டு புழுதி பூமிகளில் எல்லாம் இன விடு தலைக் கூட்டம் நடைபெறுகிற இடங்களி லெல்லாம் வந்து நிற்கின்ற பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தமிழச்சி. பரமக்குடி யில் என் வீட்டில் இருக்கும் அண்ணன் பிரபா கரன் புகைப்படத்தைப் பார்த்து, யார் என்று கேட்கும் உறவுகளுக்கெல்லாம் என் மூத்த மகன் இவன் என்று சொல்கின்ற என் தாய் ஒரு தமிழச்சி. அண்ணா குண்டு வீசி அண்ணனைக் கொன்று விட்டார்களே என்று கதறிய என் தங்கை உமா ஒரு தமிழச்சி. ஆனால் என் உடன் பிறந் தானுக்கு இரங்கல் தெரிவித்ததைக் கொச்சைப் படுத்திய ஜெயலலிதாவும் ஒரு தமிழச்சி என் றால் இந்த மண்ணிலே நாண்டுகொண்டு சாவ தைத் தவிர வேறு வழியில்லை!.

சிறிலங்காவுக்கு அமெரிக்க இராணுவம் உதவி செய்தது. பயிற்சி கொடுத்தது. பாகிஸ் தான் 13 வானூர்திகளைக் கொடுத்தது. ஆனா லும் மிரட்டி அடித்தனர் விடுதலைப் புலிகள்.

99 தமிழக மீனவர்களை சிறிலங்கா இராணு வம் கடத்திச் சென்று தற்போது விடுவித்துள் ளது. 800 தமிழக மீனவர்களை சிறிலங்கா இராணுவம் சுட்டுப் படுகொலை செய்துள்ளது.

காஷ்மீரில் ஒரு நபர் பாகிஸ்தான் பகுதியிலி ருந்து ஊடுருவி வந்துவிட்டாலே எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்று கூறுகின்ற இந்தியா, எங்கள் தமிழக மீனவ சகோதரன் சிறி லங்கா இராணுவத்தால் சுட்டுச் செத்து விழு கின்றபோது ஏன் எல்லை தாண்டிய பயங்கர வாதம் என்று சொல்ல மறுக்கிறது?

எங்கள் தவித்த வாய்க்குத் தண்ணீர் தராத நாட்டிலே எங்களுக்கு வாழ என்ன உரிமை யுள்ளது? தனித் தமிழ்நாடு கோரி நாங்கள் போராட வேண்டியிருக்காது. அவர்களே அதனை உருவாக்கி விடுவார்கள்.

**தமிழீழத்தைக் கண்டு இந்தியா ஏன் அஞ்சவேண்டும்?**

கடந்த 58 ஆண்டுகளாகத் தன்னை வல் லரசு என்று சொல்லுகின்ற இந்தியா ஏன் தமிழீழத்தைக் கண்டு அஞ்சவேண்டும்.

தமிழீழம் அமைந்த ஐந்தாவது ஆண்டில் அதனை உலக வல்லரசாகப் பிரபாகரன் மாற்றி விடுவார் என்று இந்திய அரசாங்கம் அஞ்சு கிறது. நீங்கள் தமிழீழத்தை அங்கீகரித்துப் பாருங்கள். வர்த்தகத் தொடர்புக்கு வந்து பாருங் கள். அவர்கள் செய்து காட்டுவார்கள். ஆனால் தமிழ் நாட்டில் தமிழன் எருமை மாடுபோல இருக்கிறான். ராஜீவ் கொலையை ஒருபோதும் மறக்கவும் மன்னிக்கவும் மாட்டேன் என்று காங் கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜி.கே.வாசன் சொல் கிறார். எங்கள் தலைவர்களைக் கொன்றவர்களை மன்னிக்கவும் மறக்கவும் மாட்டோம் என்று புது டில்லியிலிருந்து ஜெயந்தி நடராஜன் கூறுகிறார்.

எத்தனையோ தலைவர்கள் கெஞ்சி மன் றாடிக் கதறி அழுதபிறகும் இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டாம் என்று கூறியபின்னரும் நீங்கள் இராணுவத்தை அனுப்பினீர்கள்.

ஈழத் தமிழர்களுக்கு அப்போது உதவிய இந் திய இராணுவத்திலே இருந்த எங்கள் தமிழக வீரர்களைச் சுட்டுப் படுகொலை செய்ததை தமி ழன் மன்னித்துவிட்டான் - மறந்துவிட்டான்.

அதனால்தான் ஜி.கே.வாசன் இன்று மத்திய அமைச்சராக உள்ளார். ஜெயந்தி நடராஜன் தில்லியிலே உள்ளார். என்ன வெட்கக் கேடு!

பாதிக்கப்படும்-கொடுமைப்படுத்தப்படும்- எங்கள் தமிழ் உறவுகளுக்காக - அவர்களுக்காக நாங்கள் அழக்கூடாது - பேசக்கூடாது எனில் அப்படியான ஒரு தேசம் எங்களுக்குத் தேவை தானா? தமிழனின் தேசிய மொழி இந்தியாம். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையிலே எழுதிப்போடுகிறார்கள். ஆனால் எந்தத் தமி ழன் கோபப்பட்டான்?

இங்கே எவன் செத்தால் தனக்கு என்ன? என்ற போக்குத்தான் உள்ளது. சிரஞ்சீவி மகள் ஒரு பார்ப்பான் மகனோடு ஓடிப்போனதும் இந் தத் தமிழனுக்கு ஒரு செய்தி. சு.ப.தமிழ்ச் செல் வன் வீரச்சாவடைந்ததும் இந்தத் தமிழனுக்கு ஒரு செய்தி. இந்தத் தமிழர்களை எது பாதிக் கிறது? உங்களை ஒன்றுமே பாதிக்காது. ஏனெ னில் இங்கே நடப்பது வாக்கு அரசியல் என்ற கேவலமான கூத்து!.

இதே பிரபாகரன் கர்நாடக மண்ணில் பிறந் திருந்தால் நிலைமையே வேறு. எங்களுக்குப் பேச்சுக்கள் - அறிக்கைகளில் உடன்பா டில்லை. பேசியே எங்களையும் சாகவிடுவீர்கள்.

தமிழின விடுதலையை எதிர்க்கின்ற சுப் பிரமணியம் சுவாமியைச் சென்னை விமான நிலையத்திலேயே வழிமறித்து அடித்து நொறுக் கினால் - துக்ளக் சோவின் அலுவலகத்தை அடித்து நொறுக்கினால் - என்ன?

தமிழின விடுதலையை எதிர்ப்பவர்களே! வந்து பாருங்கள் இராமேசுவரத்துக்கு அந்தக் கரையின் இரத்த வாடை தெரியும். அவர்களின் கண்ணீர் அந்த இராமேஸ்வரத்துக் கடல் நீரில் உப்பாய் கரிக்கும்!

தமிழ்த் திரைப்பட உலகில் அண்ணனைக் கொன்றவனை - அக்காளைக் கொன்றவனை - தங்கையைக் கொன்றவனை - தாயைக் கொன்ற வனை கிளைமேக்சில் படுகொலை செய்யும் கதாநாயகனுக்குச் சிறந்த விருது கொடுப்பீர்கள் - அது உங்களுக்கு ஹீரோயிசமாகத் தெரியும். அதனையே நிஜத்தில் தமிழீழத்தில் செய் தால் உங்களுக்குத் தீவிரவாதமோ?

**சர்வதேச சமூகம் என்ன செய்தது?**

தேவாலயத்திலே கர்த்தர் விழிக்கும் நேரத் தில் அந்த நத்தார் நாளிலே ஜோசப் பரராஜசிங் கம் படுகொலை செய்யப்பட்ட போது ஜோன் போல் அறிக்கைவிட்டாரா?

## தமிழக அரசியலை மாற்றுவதற்கு ஒரு வழி உண்டென்கிறார் சீமான்

சிங்களத்திலே நன்கு உரையாற்றக்கூடிய - சர்வதேச சமூகத்தின் முன் சிங்களத்தின் கொடு மைகளை அம்பலப்படுத்திய ரவிராஜ் படு கொலை செய்யப்பட்டபோது சர்வதேச சமூகம் கண்டித்ததா?

ஏன் கண்டிக்கவில்லை? ஏனெனில் அவன் தமிழன். அதுதான் உண்மை. அறிக்கைகள் - பேச்சுக்கள் எப்போதும் சரிப்படுவது இல்லை. செயல்தான். அண்ணன் பிரபா கரன் அறிக்கை விட்டுப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையே... செயல்தானே.... நமக்கு செயல் தான் முக்கியம்.

எம் தமிழ்ச் சொந்தங்களே! ஒரு புழுவை நீங்கள் அடித்தால் கூட அது அடிக்க அடிக்க துடித்து மேலெழும். அப்படியிருக்க நம் மீதான அடக்கு முறைகளுக்கான எதிர்ப்பைக் காட்ட வேண்டாமா? தந்தை பெரியார் ஊட்டி வளர்த்த இன, மான உணர்வு இங்கே செத்து எரிந்து சாம்ப லாகி விட்டதா?

**புதிய அரசியல் வரவேண்டும்**

தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீ ழத்தையும் ஆதரிக்காத எவனுக்கும் இங்கே வாக்கு இல்லையென்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.

இறையாண்மை வெங்காயம் என்ற பெய ரில் இந்தியா ஆயுதம் கொடுத்தால் நாங்களும் எங் கள் தமிழர்களுக்காக ஆயுதங்கள் கொடுப்போம்.

'இந்திரா' ராடர்களை இந்தியா கொடுத்த பின்னர் தான் எங்கள் தமிழர்கள் கட்டு நாயக்க வான் தளத்தை அடித்தார்கள். அப்போது சிங் கள அரசு சொல்கிறது இந்தியா கோளாறான ராடர்களைக் கொடுத்து விட்டது என்று. அப் போதே தமிழன் மான நட்ட வழக்குத் தொடர்ந் திருக்க வேண்டும். இப்படிச் சிங்களவர் சொல் வது இங்குள்ள நமக்கு வெட்கமாக இல்லையா?

இன்றைக்கும் இந்தியாக்காரன் ஆயுதம் அனுப் பு கிறான். ஆறரைக் கோடி தமிழ் மக்கள் இளிச்சவாயர்களாக உட்கார்ந்து கொண்டி ருக்கிறார்கள். சிறிலங்காவுக்கு ஆயுதங்களை அனுப்பினால்-தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து இங்கு பேசவில்லை எனில் அசிட் வீச்சும் அழுகிய முட்டைகளும் வீசப்படும் என்கிற நிலைமை இங்கு இல்லை. அத னால்தான் அவர்கள் செய்கிறார்கள்.

தமிழர்களே! நீங்கள் வாக்கு செலுத்தி தேர்ந் தெடுத்த ஓட்டுப் போட்ட 40 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து நிர்வாகிக்கும் இந்திய அரசுதான் இலங்கைக்கு ஆயுதங்களைக் கொடுக் கிறது! அப்படியானால் ஆயுதங்கள் கொடுக்கிற அரசாங்கத்துக்கும் அதனை ஆதரிப்போருக் கும் எங்கள் வாக்குகள் இல்லை என்கிற நிலையை நாம் உரு வாக்க வேண்டும்.

இங்கே இராமன் என்கிற ஒருவன் பெய ரைச் சொன்னால் வாக்கு கிடைக்கும் என்கிற போது ஏன் இனவிடுதலையை முன் னிறுத்தி நம்மால் செய்ய முடியலை? ஏன் செய்யக் கூடாது? ரஜினிக்காந்தின் மர உருவங்களுக்கு பால் ஊற்றி சாகிற என் உறவுகளே! நீங்கள் இந்தக் களத்தில் சாக வாருங்கள்!. *

# ஆட்டமிழப்பிலும் சாதனை படைக்கிறார் அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கர்



ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் அதிக சதங் களைப் பெற்று உலக சாதனை படைத்துள்ள (41) சச்சின் டெண்டுல்கர் அண்மைக்காலமாகச் சதமொன்றைப் பெறத் தவித்து வருகிறார். இந்திய- பாகிஸ்தான் அணிக ளுக்கிடையில் கடந்த வியாழக்கிழமை மொஹா லியில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் சச்சின் 99 ஓட்டங்களுக்கு வெளியேறினார். இதன் மூலம் அவர் இந்த ஆண்டில் 5 ஆவது முறையாக 90 களில் ஆட்டமிழந்துள்ளார். இதன் ப்படி தனது 17 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் சச்சின் அதிக முறை 90களில் பரிதாபமாக ஆட்டமிழந்த ஆண்டாக இந்த ஆண்டைக் குறிப்பிட லாம்.

சச்சின் டெண்டுல்கர் இது வரை ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் 15 தட வைகள் 90 களில் ஆட்ட மிழந்துள்ளார். உலகில் அதிகமுறை 90 களில் வெளியேறியவர் பட்டியலில் எட்ட கடினமான இடைவெளியு டன் சச்சினே முதல் இடத்தில் உள் ளார். இதன் இரண் டாவது இடத்தில் உள்ள கிராண்ட் பிளவர், நெதன் அஸ்ட்லே, அரவிந்த டி சில்வா ஆகியோரின் 90 களில் தலா 9 தடவை தமது விக்கெட் டைப் பறிகொடுத்துள்ளனர்.

இது மட்டுமல்ல சச்சின் டெண்டுல்கர் இந்தப் போட் டியில் 99 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததன் மூலம் அவர் உலகில் அதிகமுறை 99 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தவர் வரிசையில் முதலிடத்துக்கு முன்னேறினார். சச்சின் டெண்டுல்கர் இதுவரை மூன்று முறைக்ள் 99 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்துள்ளார். அதிலும் கடைசி 6 மாதங் களுக்குள்ளேயே சச்சின் மூன்று தடவை 99 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் சனத் ஜயசூரிய 2 முறை 99 ஓட்டங்களுக்கு அரங்கு திரும்பி உலகில் அதிக முறை தனது சதத்தை ஒரு ஓட்டத்தினால் கோட்டை விட்டோர் வரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ளார். ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வர லாற்றில் 99 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த சந்தர்ப்பங்கள் இதுவரை 21 முறைகளே பதிவாகியுள்ளன. இதனி டையே சச்சின் டெண்டுல்கர் கடந்த 26 போட்டிகளில் சதம் அடிக்க முடியாமல் தவித்து வருகிறார். அவர் கடைசியாகக் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி மேற்கிந்தியத் தீவு களுக்கு எதிராக சதம் அடித்துள்ளார். இதன்படி அவர் சதமொன் றைப் பெற அதிக போட்டிகளில் விளையாடிய வரிசை யில் தற்போதைய இடைவெளி இரண்டாவதுஇடத்துக்கு முன் னேறியுள்ளது. இதற்கு முன்னர் சச்சின் தனது 12 அவது சதத் தைப் பெற 32 போட்டிகளில் விளையாட வேண்டி ஏற்பட்டது.

சச்சின் பாகிஸ்தானுக்கு எதிராக 90 களில் ஆட்ட மிழக் கும் 5 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும். இதன்படி சச்சின் சதம் பெறும் வாய்ப்பை அதிகமுறை தவிர்த்த அணியாகப் பாகிஸ்தான் தன்னைப் பதிவு செய்து கொண்டது. இதில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளுக்கு எதிராக சச்சின் தலா மூன்று தடவைகள் 90 களில் அரங்கு திரும்பியுள்ளார். இதில் விசேட அம்சம் என்ன வென் றால்,சச்சின் மேற்படி 90 களில் ஆட்டமிழக்காமல் அவை அனைத்திலும் சதம் பெற்றிருக்கும் பட்சத்தில் அவர் சர்வ தேச கிரிக்கெட் வரலாற்றில் 100 சதங்களைப் பெற்ற ஒரே கிரிக்கெட் வீரராகச் சாதனைப் புத்தகத்தில் பதிவாகி இருப் பார். சச்சின் இதுவரை ஒருநாள் போட்டிகளில் 41 சதங்களை யும் டெஸ்ட் போட்டிகளில் 37 சதங்களையும் பெற்றுள்ளார். அவர் டெஸ்ட் போட்டிகளில் 90 களில் 7 முறை ஆட்டமிழந்துள்ளார்.

சச்சினுக்கு மற்றுமொரு வகையில் கடந்த வியாழக் கிழமை போட்டி முக்கியமானதாக அமைந்திருந்தது. இந்த போட்டி அவருக்கு 404 ஆவது ஒருநாள் சர்வதேச போட் டியாகும். இதன்படி அவர் உலகில் அதிக ஒருநாள் போட்டிக ளில் விளையாடிய வீரராக சனத் ஜயசூரியாவைப் பின் தள்ளி முதலாவது இடத்துக்கு முன்னேறினார். ஜயசூரிய இது வரை 403 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இதேவேளை வியாழக்கிழமை நடந்த போட்டியில் [illegible] பாகிஸ்தான் [illegible] உதிரிகள் முக்கிய பங்கு வகித்தது. இதில் பாக். அணி 41 ஓட்டங்களை உதிரிகளாக வாரி வழங் கியது. இதன் மூலம் இந்திய பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான போட்டியின் இன்னிங்ஸ் ஒன்றில் அதிகூடிய உதிரிகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பமாக இது பதிவானது.

அத்துடன் இதில் பாகிஸ்தான் அணி 'வைட்' ஓட்டங் களாக 31 ஓட்டங்களைக் கொடுத்தது. இதுவும் இரு நாடு களுக்கும் இடையிலான இன்னிங்ஸ் ஒன்றில் வழங்கிய அதிக 'வைட்'களாகவும் சாதனை படைத்தது. பின்னர் பந்து வீசிய இந்திய அணி 26 ஓட்டங் களை உதிரிகளாக வழங்கியதன் மூலம் இந்தப் போட்டியில் மொத்த மாக 67 உதிரிகள் வழங்கப்பட்டது.

# இந்திய டெஸ்ட் அணிக்கு தலைவரானார் அனில் கும்ளே

**டெஸ்ட் அணித் தலைவர் கும்ளே**




இந்திய டெஸ்ட் அணித்தலைவராக 37 வயதான அனில் கும்ளே தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் இந்தியாவின் 30 ஆவது டெஸ்ட் அணித் தலை வர் என்ற பெருமையைப் பெறு -கிறார். இதன்படி அடுத்து நடை பெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதி ரான 3 டெஸ்ட் போட்டிகளுக்கும் அனில் கும்ளே இந்திய அணித்தலைவராகச் செயற்படவுள்ளார். இதன் முதல் போட்டி டில்லியில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணியின் முன் னணி சுழற்பந்து வீச் சாளரான அனில் கும்ளே இந்திய அணிக்காக அதிக டெஸ்ட் விக் கெட்டு களை வீழ்த்தியவர் என்ற சாதனை படைத்துள் ளமை குறிப் பிடத்தக் கது. அவர் இதுவரை 566 டெஸ்ட் விக்கெட்டு களை வீழ்த்தியுள்ளார். அனில் கும்ளே இதற்கு முன்னர் ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றில் மாத்திரம் இந்திய அணிக்குத் தலைவராக செயற்பட்டுள்ளார். அது 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்குஎதிரான போட்டியிலாகும். சென்னையில் நடந்த இந்த போட்டியில் இந்தியா 4 விக்கெட்டுகளால் வென்றது. கும்ளே இதுவரை 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானுக்கு எதிரான அடுத்த இரண்டு ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணியில் எந்த மாற றமும் செய்யப்படவில்லை. அதே அணி நீடிக்கும் என இந்திய தேர்வுக்குழு அறிவித்துள்ளது. இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று கான்பூரில் நடைபெறவுள்ளது. *

டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் வரதராஜக் குருக்கள்**
**அரிஹரசர்மா**

*திதி: ஐப்பசி மாத வளர்பிறை துதியை*

தோற்றம்
20.08.1980

மறைவு
14.11.2004

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டுப் போகாது
அடே அரிஹரா! நீ எம் நெஞ்சில் திருமூலர்
போல் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திடுவாய்.

மடம் வீதி,
கல்வியங்காடு.

**குடும்பத்தார்.**

(67780)

# அறிவித்தல்

*(குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 16 ஆம் பிரிவின்படியானது)*

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வழக்கு இல. நானாவிதம்/100

1. திருமதி வசுந்தரா சடாட்சரன் சுதிர்காமர்
   லட்சுமி வாசா,
   நவாலி தெற்கு,
   மானிப்பாய்.
2. சிவசிதம்பரம்பிள்ளை சிவசண்முகப்பிள்ளை
   வத்தானை வளவு,
   உடுவில் கிழக்கு,
   சுன்னாகம்.
3. திருமதி கிறேஸ் ரட்ணதேவி ஜெயரட்ணம்
   சின்னப்பா லேன்,
   நவாலி தெற்கு,
   மானிப்பாய்.
4. வண.ஈனோக் பூரணமகியன் புனிதராஜா
   கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
   மருதனார்மடம்,
   சுன்னாகம்.

வழக்காளிகள்

எதிர்

1. அதி.வண.டானியல் செல்வரத்தினம்
   தியாகராஜா,
   பேராயர் இல்லம்,
   வட்டுக்கோட்டை.
   அத்துடன்-
   36-5/2, சின்சபா றோட்டு,
   கொழும்பு- 6.
2. ஆசீர்வாதம் அருள்யோசப்
   ஆதீனக்காரியாலயம்,
   தென்னிந்தியத் திருச்சபை, யாழ். ஆதீனம்,
   வட்டுக்கோட்டை.
3. திருமதி ஷிரானி மில்ஸ்
   அதிபர்,
   மிஷன் இல்லம்,
   உடுவில் மகளிர் கல்லூரி,
   உடுவில்.
4. திரு C.D.சின்னக்கோன்
   3, E. புளொக்,
   பம்பலப்பிட்டி பிளாட்ஸ்,
   கொழும்பு- 04.
5. வண.செல்வி டெய்சி ஆசீர்வாதம்
   இல.17, பிரான்சிஸ் றோட்டு,
   கொழும்பு- 6
6. வண.G. நடராஜா
   ஆசிரியர் தங்குமிடம்,
   யாழ்ப்பாணக் கல்லூரி,
   வட்டுக்கோட்டை.
7. கலாநிதி செல்வி C.V. செல்லையா
   44/1, E.S. பெர்னாண்டோ மாவத்தை,
   கொழும்பு- 6,
8. Dr.V.R. டேவிட்
   மே/பா, திரு.பாலகிருஷ்ணன்,
   லோட்டன் றோட், மானிப்பாய்.
9. Dr. திருமதி தயா தியாகராஜா
   பேராயர் இல்லம்,
   வட்டுக்கோட்டை,
   அத்துடன்-
   36-5/2, சின்சபா றோட்டு.
   கொழும்பு-6,
10. வண.S.P. நேசகுமார்
    பிராந்தியக் குருமுதல்வர்,
    பிராந்தியக் குருமுதல்வர் இல்லம்,
    அங்கிலிக்கன் திருச்சபை,
    பிரதான வீதி,
    சுண்டிக்குளி,
    யாழ்ப்பாணம்.
11. வண. செல்வி M.F.J. இரத்தினசிங்கம்
    மெதடிஸ்த திருச்சபை,
    புத்தூர்.
12. திருமதி E.A. ஜெயராஜன்
    ஆசிரியர் தங்குமிடம்,
    யாழ்ப்பாணக் கல்லூரி,
    வட்டுக்கோட்டை.

எதிராளிகள்

மேற்படி வழக்காளிகள், இவ்வழக்கின் மேலே கூறப்பட்டுள்ள எதிராளிகளுக்கெதிராக, உடுவில் மகளிர் கல்லூரிக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கல்லூரிச்சபை தொடர்பாக இம்மன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். இம்மன்று, இவ்வழக்கில், மேற்படி எதிராளிகளுக்கெதிராக கட்டாணையையும் பிறப்பித்துள்ளது. ஆதலால் இதில் அக்கறையுள்ள வேறு எவராவது இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் இடைபுகுனராக நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ இணைந்து கொள்ளலாம் என்று இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

மேலும் இவ்வழக்கு 2008.01.10 ஆம் திகதி இம்மன்றிற் காலை 9 மணிக்குக் கூப்பிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

*நீதிமன்றக்கட்டளைப்படி,*
**ம. செல்வரத்தினம்,**
பதிவாளர்,
*மாவட்ட நீதிமன்றம்,*
*மல்லாகம்.* 09.11.2007.

(67784)

## கண்காட்சி நீடிப்பு

நல்லூர், நவ.11

வட்டுக்கோட்டை வைரவிழா மண்டபத்தில் நடைபெற்றுவரும்'கரையாத கற்பனைகள்'சவர்க்கார சிற்பக் கண்காட்சி மேலும் இரு தினங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமைக்குமாக மேலும் இரு தினங்களே நீடிக்குப்பட்டுள்ளது.

இன்றுஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைய இருந்த இக் கண்காட்சி அனேகரதுவேண்டுகோளுக்கிணங்க மேலும் இரு தினங்கள்நீடிக்கப்பட்டுள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (203-111)

## சுன்னாகத்தில் நாளை கண்பரிசோதனை முகாம்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட உள்ளது.

இம் முகாமில் வைத்து பழமரக் கன்றுகளும் விநியோகிக்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் லயன்ஸ்எஸ்.யோகாநந்தராஜா தெரிவித்தார். (1-202)

## பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி,நவ.11

தரம்-5 புலமைப்பரில் பரீட்சையில் சித்திபெற்ற வடமராட்சி வலய மாணவர்களுக்கு மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையினரால் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு உடுப்பிட்டி மகளிர்கல்லூரிக் கலையரங்கில் பரிசளிப்பு விழா நடத்தப்படவுள்ளது.

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக்கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வை.செல்வராசா கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப்பொது முகாமையாளர் க.த. ஆனந்தராஜா, யாழ். பிராந்திய உதவிப் பிராந்திய முகாமையாளர் [illegible] தி சரஸ்வதி ஆகியோர் கலந்துகொள்வர். (203-155)

# கண்ணீர் அஞ்சலி



அரசினர் ஆயுள்வேத
வைத்தியசாலை, கைதடி.

எமது வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி
திருமதி வி.கைலாசபதி அவர்களின்
அன்புத்தாய்
திருமதி **மீனாம்பாள் முத்தையா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வைத்தியசாலைச் சமூகம்.**

(67785)

# அரசாங்க அறிவித்தல்
# கேள்வி அறிவித்தல்
# HSDP 2007

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் அவர்களால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள வேலைகளுக்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளன. தகுதியான பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் கீழே காட்டியவாறு கேள்விப்பிணை மற்றும் கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 250/= ஐயும் மீளளிக்கக்கூடிய தொகையான 1000 ரூபாவையும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் செலுத்தி எதிர்வரும் 17.11.2007 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் சீல் வைத்த உறையிலிட்டு 19.11.2007 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னதாக இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப் பட வேண்டும். அன்றைய தினமே கேள்விகள் உடன் திறந்து பரிசீலிக்கப்படும். அத் தருணம் கேள்விகாரர் அல்லது அவரின் பிரதிநிதி கலந்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களை அலுவலகத் தில் அறிந்து கொள்ள முடியும்.

**கேள்வி விவரம்**

1. மின் பிறப்பாக்கிகள் (power generator) திருத்தவேலை (2.0Kw இல் இருந்து 12.5 kVA வரை தனித்தனியாக கேள்விப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 15 மின் பிறப்பாக்கிகள் உள்ளன).
2. நோயாளரின் காவு படகு (Ambulance Boat ) '' சமுத்திரதீபம்''- நயினாதீவு திருத்தவேலை
3. X கதிர் இயந்திரம் திருத்தம் (நடமாடக் கூடியது ஒன்று, நிலையானது இரண்டு, தனித்தனியாகக் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்).
4. இயங்கு நிலையில் உள்ள பிரேத அறைக் குளிரூட்டி மேலதிகத் திருத்தவேலை
5. திருத்தம் LG 36000 BTU (3 Phase) காற்றுச்சீராக்கி (Air Conditioner )
6. குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்
7. தொற்றுநீக்கி உபகரணம் திருத்தம்

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

(சி/54314)

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் பிரதேச செயலகங்களில் தேசிய அடையாள அட்டை விடயங்களைக் கையாளுவது சம்பந்தமாக அலுவலகங்களை அமைப்பது தொடர்பிலான கேள்விப் பத்திரங்கள் பொருத்தமான கேள்விதாரர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. வேலணை | 07. கோப்பாய் |
| 02. யாழ்ப்பாணம் | 08. நெடுந்தீவு |
| 03. சாவகச்சேரி | 09. ஊர்காவற்றுறை |
| 04. பருத்தித்துறை | 10. காரைநகர் |
| 05. உடுவில் | 11. கரவெட்டி |
| 06. சங்கானை | |

மேற்படி கேள்விகோரலின் போது மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா 500/= ஆகும்.

கேள்வி ஆவணங்களையும் ஏனைய தகவல்களையும் சாதாரண வேலை நாள்களில் மு.ப. 9.30மணி முதல் பி.ப. 12 மணி வரையும் பி.ப.1.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையும் 15.11.2007 முதல் 28.11.2007 வரையும் உதவி அரசாங்க அதிபர் (த.பீ), இடம்பெற்றுக் கொள்ளலாம். முடிவுத் திகதிக்கு முந்திய தினம் வரை குறிப்பிட்டவேலை தொடர்பான பிரதேச செயலகங்களைப் பார்வையிடவும் முடியும்.

கேள்விகள் 28.11.2007 ஆம் திகதி மதியம் 2 மணிக்கு திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளை கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

பொறியிடப்பட்ட கேள்விகள் **''தலைவர், மாவட்டச் செயலகக் கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்''** என முகவரியிட்டு மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் உள்ள கேள்விப்பெட்டியில் இடவேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஒழுங்கமைக்கும் அலகு''** எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விதாரர்களின் தரம் கட்டட நிர்மாணித்தல் இக்ராட் தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் இருப்பதுடன், கேள்வி ஆவணங்களை, வர்த்தகத் தலைப்புடனான கடிதம் ஒன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

**க.கணேஷ்,**
*அரசாங்க அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*

(67784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளை அறிவுஜீவிகளாக்கும் தாய்ப்பால்

புட்டிப்பால் குடித்த குழந்தைகளை விடத் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளே நல்ல அறிவுஜீவிகளாக வளர்வதாக இங்கிலாந்து ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தேசிய அறிவியல் அக்கடமி நடத்திய ஆய்வின் முடிவுகள் வெளியாகியுள்ளன. தாய்ப்பாலில் உள்ள சிறப்புக் கொழுப்பு அமிலங்கள் புட்டிப்பாலில் இருப்பதில்லை. இதன் காரணமாகத் தாய்ப்பாலை குடித்து வளரும் குழந்தைகள் , புட்டிப்பாலை குடித்து வள ரும் குழந்தைகளை விட நல்ல புத்திசாலிகளாக இருக்கிறார்கள்.

தாய்ப்பாலில் உள்ள FADS2 என்ற புதியவகை ஜீன்தான், குழந்தை களின் புத்திசாலித்தனம், ஆரோக்கியம், மகிழ்ச்சித் தன்மை ஆகியவற்றை அதிகரிக்க உதவுவதாக இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தாய்ப்பாலில் மட்டுமே பொலி அன் சச்சுரேற்றப் கொழுப்பு அமிலங்கள் உள்ளது என்பதும் இந்த ஆய்வுமூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பசுப்பாலில் இது இல்லை. குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு இந்த கொழுப்பு அமிலங்கள்தான் முக்கியம் என்பதும் குறிப்பிடத்தக்கது. தாய்ப்பால் கொடுத்தால் இளமையும், அழகும் குறைந்து போய்விடும் என்ற கருத்து உள்ள இன்றைய இளம் தாய்மார்களுக்கு இந்த ஆய்வு நிச்சயம் கண்களைத் திறந்து விட உதவும் என்று எதிர்பார்க்கலாம். ★




# அயர்லாந்து எழுத்தாளருக்கு 'புக்கர்' பரிசு

இந்த ஆண்டுக்கான புக்கர்(Man Booker)பரிசை அயர்லாந்து எழுத்தாளர் ஆன் என்ரைட் வென்றிருக்கிறார். அவர் எழுதிய ''தி கேதரிங்'' (The Gathering)என்னும் நாவலுக்காக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

இலக்கிய உலகில் பெருமைக்குரிய விருதாக 'புக்கர்' பரிசு கருதப்படுகிறது. ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் இந்த பரிசு காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த மிகச்சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான விருது அயர்லாந்து எழுத்தாளர் ஆன் என்ரைட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

45 வயதான ஆன் இந்த விருதைப் பெறும் இரண்டாவது அயர்லாந்து பெண்மணியாவர். அவர் எழுதிய ''தி கேதரிங்'' என்னும் நாவலுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

ஒரு குடும்பத்தின் சோகத்தை ஒரு பெண்மணியின் பார் வையில் இந்த நாவல் விவரிப்பதாக பாராட்டப்படுகிறது. குடும்பம், திருமணம் ஆகியவற்றில் வெறுமையை எதிர் கொள் ளும் பெண்ணின் பயணத்தை அந்த நாவல் விவரிப்பதாக தேர்வுக்குழு பாரா ட்டியுள்ளது.

## பலதும் பத்தும்

# விதையில்லா எலுமிச்சை

விதையில்லாத எலுமிச்சை விரைவில் விற்பனைக்கு வரவுள் ளது.

பிரிட்டனில் இந்த விதையில்லா எலுமிச்சை அடுத்த ஆண்டு முற்பகுதியில் விற்பனைக்கு வரும் என்று 'டெய்லி மெய்ல்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தென்னாபிரிக்காவைச்சேர்ந்த விவசாயி ஒருவர் கடந்த10 ஆண்டுகளுக்கு முன்னர் தற்செயலாக விதையில்லா எலு



மிச்சையைப் பயிரிடும் வழியைக் கண்டுபிடித்தார். அதன் பிறகு இந்த எலுமிச்சையை மிகப் பெரிய அளவில் பயிரிடுவதற்கான வழிகளை ஆராய்ந்து வந்த அவர் அதில் வெற்றி பெற்றார்.

இந்த எலுமிச்சை சாதாரண எலுமிச்சையை விட சாறு நிரம்பியதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் இதனை பிழிந்து சாறு எடுப்பதும் சுலபமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. ★

# இதயத்தைக்கண்ட அதிர்ஷ்ட பெண்



தூங்காது இதயத்தைத் தாங்களே கண்களால் காணும் அதிர்ஷ்டம் யாருக்கும் கிடைப்பதில்லை. ஆனால் அப்படிப்பட்ட அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளார் லண்டனைச் சேர்ந்த ஜெனிபர் சட்டன் என்ற 23 வயதுப் பெண்மணி.

இவரது இதயம் பாதிக்கப்பட்டதால் இவருக்கு கடந்த ஆண்டு இருதய மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தன்னிடம் இருந்து அகற்றப்பட்ட இதயத்தை 'வெல்கம் கலெக்ஷன்' நிறுவனம் காட்சிக்கு வைக்க ஜெனிபர் அனுமதி அளித்திருந்தார்.

இந்தக் கண்காட்சி தற்போது லண்டனில் நடைபெற்று வருகிறது. கண்காட்சிக்கு வந்த ஜெனிபர் தனது பழைய இதயத்தைக் கண்டார்.

தனக்குப் பெரும் வலியையும் துன்பத்தையும் அளித்த இதயத்தை நேரில் காண்பது அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது என்று அவர் கூறியுள்ளார்.

தனது பழைய இதயத்தை காண்பதற்கு தமக்கு ஆவலாக இருந்தபோதிலும் தற்போது தனக்கு உயிர் கொடுத்து மறுவாழ்வு அளித்துள்ள தற்போதுள்ள இதயத்தையே தாம் மிகவும் நேசிப்பதாக ஜெனிபர் தெரிவித்துள்ளார். ★

# சுப்பர்ஜம்போ முதல் பயணம்

ஏயர் பஸ் நிறுவனம் தயாரித்துள்ள முதல் மிகப்பெரிய விமானமான எயர் பஸ் சுப்பர் ஜம்போ ஏ-380 தனது முதல் வர்த்தகப் பயணத்தை சிங்கப்பூரில் இருந்து சிட்னிக்குத் தொடங்கியது. இணையத்தளம் மூலம் பெருந்தொகைக்கு இந்த விமானத்தின் முதல் பயணத்தில் இடம் பெறுவதற்காக விமானச் சீட்டுகள் வாங்கிய சிறப்புப் பயணிகளுடன் சுப்பர் ஜம்போ சீறிப்பறந்தது.

இந்த முதல் பயணத்தில் பங்கேற்றுள்ள பயணிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாக விமானி கப்டன் றொபேட் டிங் கூறினார். இந்த இரண்டடுக்கு சுப்பர் ஜம்போ விமானத்தை சிங்கப்பூர் எயர் லைன்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளது.

பிரிட்டனை சேர்ந்த ஜூலியன் ஹேவார்ட் என்பவர் அதிகபட்சமாக ஒரு லட்சம் டொலர் கொடுத்து இந்த விமானத்தில் பயணம் செய்கிறார். இந்த விமானத்தில் ஒரே நேரத்தில் 853 பேர் பயணம் செய்ய இயலும். இந்த விமானம் விமானத் துறையில் ஒரு புரட்சியாகக் கருதப்படுகிறது. ★




# ஆங்கில மொழிக் கல்வியின் இன்றைய நிலையும் போக்கும்



தற்பொழுது ஆங்கிலக் கல்வியின் நிலை திருப்திகரமானதாக இல்லையென்பது பல மட்டங்களிலும் உணரப்படுகிறது. அதைச் சீர் செய்வதற்கான பல முயற்சிகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இம் முயற்சிகள் எவ்வளவு தூரம் பயனுள்ளவையாக அமைகின்றன என்பது ஆராயப்பட வேண்டியதொன்று. இம்முயற்சிகளில் இன்னும் பொருத்தமான பல அம்சங்கள் சேர்க்கப்படுவதோடு, தகுதியான பலருடைய பங்களிப்பும் பெறப்படவேண்டும்.

ஆங்கில அறிவு குறைந்து கொண்டு போவதற்குப் பல காரணங்கள் இருப்பது போல அது அவசியமாகிப் போனதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து நன்மை பயக்கக்கூடியவகையில் செயற்பட வேண்டியது கற்றோரது கடமையாகும்.

### தவறு யாருடையது?

மாணவர்களிற் பெரும்பாலானோர் ஆங்கிலப் பாடத்தில் குறைவாக இருப்பது கண்கூடு. பொதுவாக மற்றைய பாடங்களை விட இப் பாடத்தில் மட்டும் மாணவர்கள் மிகவும் குறைவாக இருப்பதனால் தவறு அவர்களுடையது என்று கொள்ள முடியாது. இப் பாடத்தை விரும்பிச் சிறப்பாகக் கற்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் இல்லையென்றுதான் கூறவேண்டும். ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை அவர்களுடைய மனதில் பதியச் செய்வதற்கான முயற்சிகள் தேவை. அத்துடன் இதில் ஒரு பயம் ஏற்படுவதையும் தடுக்கவேண்டும். மற்றைய பாடங்களைப் போலல்லாது இப் பாடம் தொடர்ச்சியாகக்கற்றுக்கொள்ளப்படாவிட்டால் பயன் தராது என்பதையும் அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க வகையில் ஆங்கிலக் கல்வி அமையவேண்டுமென்ற நோக்கில்தான் காலத்திற்குக் காலம் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுப் புதிய புதிய வழிமுறைகள் புகுத்தப்படுகின்றன. கவலைப்பட வேண்டிய விஷயம் என்னவெனில் இதில் நன்மைக்குப் பதில் தீமையே ஏற்பட்டிருக்கிறது. ஏற்பாடுகளில் குறைபாடு இல்லையென்று தர்க்க ரீதியாக நிரூபிக்கப்பட்டாலும் பயன் கொடுக்கவில்லையென்ற அளவில் பார்க்கும்போது குறைபாடு இருக்கிறது என்று கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

### பாடவிதானம் எல்லா பாடசாலைகளுக்கும் பொருந்தாது

சூழல், வசதி முதலான காரணங்களினால் பாடசாலைகளிடையே கல்வித்தரம் வேறுபடுகிறது. இக் காரணத்தால் ஒரே பாடவிதானம் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொருந்தாது. ஆங்கிலக்கல்விக்கான பாடத்திட்டம் மிகவும் விரிவாக வரையறை செய்யப்பட்டிருப்பதன் காரணமாகப் பாடவிதானம் தயாரிக்கும்போதும் சரி கற்பிக்கும்போதும் சரி சில வரையறைக்குள்ளேயே செயற்பட வேண்டியுள்ளது. மாணவர்களுடைய அடைவு மட்டம் இவ்வளவில் இருக்கும் என்று ஓர் எடுகோளை வைத்துப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் துரதிஷ்டவசமாக பல மாணவர்களில் எதிர்பார்க்கப்படும் நிலை காணப்படுவதில்லை. இதே இடத்தில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் உண்டு.

பாடசாலையில் வழங்கப்படுவது அறிவுத் தேடலுக்கான ஒரு வழிகாட்டலா? அல்லது சிற்சில தடைகளைத் தாண்டுவதற்குக் கொடுக்கப்படும் பயிற்சியா? என்பது ஒரு விஷயம். பரீட்சையானது எந்தளவிற்கு மாணவனுடைய

## எல்லா பாடசாலைகளுக்கும் ஒரே பாடவிதானம் பொருந்தாது

கல்வித்தரத்தை எடைபோட உதவும்? என்பது இன்னொரு விஷயம். ஒரு குறிப்பிட்ட பாடத்தில் அதிக புள்ளிகள் வாங்கும் மாணவர்கள் அப்பாடத்தில் உண்மையில் தேர்ச்சியுள்ளவர்களா? அல்லது சில உத்திகள் மூலம் பரீட்சையைத் திறமையாகச் செய்தவர்களா? என்பது ஆராய்ச்சிக்குரியது. பரீட்சைக்குத் தயார் செய்யும் ஒரு கல்வி முறை ஒரு மொழியைக் கற்று அதில் தேர்ச்சியடைவதற்கு மாணவனுக்கு உதவி செய்யும் என்று நம்புவதற்கில்லை.

### ஆசிரியருக்குப் போதிய சுதந்திரம் இல்லை

மாணவனுடைய நிலையை மதிப்பீடு செய்து அதனடிப்படையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியருக்குப் போதிய சுதந்திரமில்லை. அவர் தனக்கு விதிக்கப்பட்டதை விதியே என்று செய்து முடிக்கிறார். இதனால் மாணவனுக்கு மட்டுமல்ல ஆசிரியருக்கும் கேடு விளைகிறது. கல்வி போதிப்பது பற்றி ஆசிரியருக்கு வழங்கப்பட்ட பயிற்சியும் வீண் போவதோடு அவர் தனது சொந்த அறிவை விருத்தி செய்யவும் தூண்டுதல் இல்லாமற் போகிறது.

குறிப்பிட்ட ஒரு வகுப்பில் மாணவன் ஆங்கிலப் பாடத்தைப் பின்பற்றுவதற்குச் சிரமப்பட்டானாயின் பாடங்கள் தொடர்ந்து கொண்டுபோக வகுப்புகளும் ஏற ஏற அவனால் பாடத்தைக் கற்ற முடியாது போகும். இந் நிலையில் ஆங்கி

**வை. சந்திரபாலன்**

லம் பற்றிய ஒரு பயமும் வெறுப்பும் ஏற்படும். இப்படியாக மாணவன் ஆங்கிலக் கல்வியில் வெறுப்படையாமல் மகிழ்ச்சியாக ஈடுபடவேண்டுமென்ற நோக்கில்தான் பல தசாப்தங்களுக்கு முன்னரேயே பிரபல ஆங்கிலப் பாடநூல் ஆசிரியர் டபிள்யு. டி.சமரநாயக தனது நூல் தொடருக்கு (English With A Smile) என்று பெயரிட்டார். பாடத் திட்டத்திலுள்ள இன்னொரு பாதகமான அம்சம் இலக்கண ஒழுங்கு மாற்றியமைக்கப்பட்டிருப்பது. இது மாணவர்களுக்கு மேலும் சிரமத்தைக் கொடுக்கிறது. இது காலவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த இலக்கண ஒழுங்கு நல்ல பயனைத் தந்திருக்கிறது. மேலும் உலகின் பல பாகங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது ஏன் மாற்றப்பட்டிருக்கின்றது என்பதற்குப் போதிய விளக்கங்கள் பெற முடியவில்லை.

மேற்குறிப்பிட்டவற்றையெல்லாம் கடந்து பல மாணவர்கள் தமது சூழல், இயல்பு, ஊக்குவிப்பு முதலிய காரணங்களினால் போதிய தகுதி பெறுகிறார்கள். பெரும்பான்மையான சராசரி மாணவர்களைப்பற்றித்தான் கவனமெடுக்க வேண்டியிருக்கிறது. இதே வேளை பல மாணவர்கள் பரீட்சையில் தமது தகுதிக்கு மீறிய பெறுபேறுகளையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

### உரையாடல் பயிற்சி

உரையாடல் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று பொதுவான கருத்து ஒன்று உண்டு. இது ஒரு முக்கியமான அம்சம்தான். இதற்கென்றே குறிப்பிட்ட சில கல்வி நிலையங்களும் இயங்குகின்றன. பிள்ளைகள் உடனடியான சில தேவைகளுக்குத் தயார் பண்ண இது உதவுமே தவிர ஆங்கிலக் கல்விக்கு நன்மை பயக்கும் என்று சொல்ல முடியாது.

உரையாடலில் இலக்கண வரம்புகள் மீறப்படுகின்றபடியால் இலக்கணத்தை முன்னரே கற்றுக்கொள்ளாத மாணவனுக்கு பின்னாளில் குழப்பம் ஏற்படுகிறது. தொடர்ச்சியாகக் கற்றுக்கொண்டுவரும் மாணவர்களை உரையாடலுக்குத் தயார்படுத்துவதுதான் சரியான நடை முறை.


தொடர்ச்சியாகக் கற்று ஆங்கில மொழியைத் தெளிவாக அறிந்து கொள்ளாதவர்களுக்கு பின்னாளில் நிர்வாகச் சட்டம் சம்பந்தமான விஷயங்களில் ஈடுபடும்போது பெரும் சிரமம் ஏற்படும். சில பதவிகளில் அமர்ந்திருப்போர் பெரும் சிக்கல்களைச் சந்திக்கிறார்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Students / Businessmen / Working Employees

# INTERNATIONALLY RECOGNISED AMERICAN DEGREES



Be qualified, while studying @ your home anywhere in SRI LANKA

## PARAMOUNT UNIVERSITY OF TECHNOLOGY
## WYOMING, USA

FOR THE FIRST TIME IN SRI LANKA
get an American Degree for
**less than 200 000 Rs...**

- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- Bachelor of Electrical and Electronic Engineering

Limited Registrations taken in per year.....

**Call Farhadh on 0777 99 44 00**

Governor's College - Degree Division
376 Galle Road, Colombo 03
Tel - 112 375 371
Email - governors@sltnet.lk

---

# பரத நாட்டிய அரங்கேற்றம்



ஸ்ரீமதி ஜெயச்சித்ரா
சிவமயூரனின்
மாணவிகளும்
(சித்ர கலைமன்றம்)
திரு.திருமதி
**நவரட்ணசிங்கம்**
தம்பதிகளின்
புதல்விகளுமான
ஜீவிதா நவரட்ணசிங்கம்,
சஜந்தநிதி நவரட்ணசிங்கம்
ஆகியோரின்
பரத நாட்டிய அரங்கேற்றம்

இன்று(11.11.2007) மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறும். பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக அகில இலங்கை கம்பன் கழகத்தைச் சேர்ந்த கம்பவாரிதி இ. ஜெயராஜ் மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி பிரதி அதிபர் திரு. மா. கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

**திரு. திருமதி நவரட்ணசிங்கம்** (பெற்றோர்).

---

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் செல்லையா**
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்- மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)

மலர்வு
31-01-1924

உதிர்வு
09-11-1999

திதி: துதியை 11.11.2007

ஆண்டுகள் எட்டுச் சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன
அவைகள் அனைத்தும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா?

50/2, Hampden Lane,
Wellawatte.

உங்கள் நினைவில் வாடும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

தகவல்: மகன்

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி இரத்தினசிங்கம் பரமேஸ்வரி

[சிவசக்தி மோட்டார்ஸ் உரிமையாளரின் பாரியார்
-பருத்தித்துறை]




எமது ஆருயிர்த் தெய்வத்தின்
மறைவுச் செய்திகேட்டு எமக்கு
ஆறுதல் கூறி இறுதிக்கிரியையிலும்
பங்கு கொண்ட அனைவருக்கும்
எமது நன்றியைத் தெரிவிப்பதோடு,
நாளை (12.11.2007) திங்கட்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு அனைவரையும்
வேண்டுகின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்)

பிரதான வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(67728)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் சிறுகதை இலக்கிய முன்னோடிகளில் முதல்வரிசையில் நிற்பவர்களில் ஒருவர் சோ.சிவபாதசுந்தரம். பல எழுத்தாளர்களை உருவாக்கி, ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் ஊன்றுகோலாகவும் விளங்கிய ''ஈழகேசரி'' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவர் சோ.சி. அப் பத்திரிகையின் மூலகர்த்தாவான நா.பொன்னையா அவருக்கு உதவியாக இருந்த குமாரசாமிப் புலவரின் புதல்வர் கு.அம்பலவாணர் ஆகியோரை அடுத்து ஈழகேசரியின் ஆசிரியராகப் பணி புரிந்தார். அப்போது பல சிறுகதை எழுத்தாளர்களை உருவாக்கியவர்: உருவாகக் காரணமாக இருந்தவர். ''ஆனந்த விகடன்'' சஞ்சிகையில் இவரது முதலாவது சிறுகதை பிரசுரமானது. வானொலியிலும் பணிபுரிந்தவர். சோ.சிவபாதசுந்தரம் எழுதிய ''ஒலிபரப்புகலை'' பலரை அத்துறைக்கு ஆற் றுப்படுத்தியது எனலாம். பிரயாணக் கட்டுரைகளையும் இவர் நிறைய வடித்திருந்தார்.

'பரிசுக் கட்டுரை'' அவர் எழுதிய சிறந்த சிறுகதைகளில் ஒன்று.

# பரிசுக் கட்டுரை

பதினைந்து தரம் எழுதியெழுதி அலுத்துப் போய்க் கிழித்தெறிந்து விட்டு அப்பொழுதுதான் பதினாறாவது தடவை ஒரு கட்டுரையுடன் மண்டையைப் போட்டுடைத்துக் கொண்டிருந்தேன். அந்தவேளை பார்த்து அறையின் கதவைத் திறந்துகொண்டு ''கேட்டியளா!'' என்ற பீடிகையுடன் நுழைந்தாள் ராஜி.

பிடித்து விழுங்கி விடலாமா என்றிருந்தது எனக்கு வந்த ஆத்திரம்! கொஞ்சம் நிம்மதியாக உட்கார்ந்து ஏதாவது எழுதலாமென்று பார்த்தால் அந்தப் பொறுத்த வேளையில் குழப்ப வந்துவிட்டாள் அவள். வந்த கோபத்தில் எனது பவுண்டன் பேனா மை முழுவதையும் அவளுடைய மூஞ்சியிலே கொட்டியிருப்பேன். ஆனால், ராஜியின் முகத்தில் தோன்றிய ஒரு மோகனப் புன்னகை அப்படிச் செய்ய விடாமல் தடுத்து விட்டது. ஒருவாறு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, ''எனக்கு காது கீது ஒன்றும் செவிடாகி விடவில்லை. வேண்டியதைச் சொல்லித் தொலைத்து விட்டு அப்புறம் போ'' என்று எரிந்து விழுந்தேன் நான்.

அவளுடைய புன்னகை கலகலத்த சிரிப்பாக மாறியது. ''பூ! அதற்கிடையில் மூக்கு நுனிக்கு வந்துவிட்டது கோபம்? அப்படியென்ன பிரமாதமான எழுத்து? ஆமாம், உங்கள் எழுத் துக்கள் தான் சந்தையில் விலைப்படுகின்றனவே. ஏதோ இரண்டொரு கட்டுரை யாரோ குட்டிப் பத்திரிகைக்காரர் இடம் நிரப்பவேண்டி பிரசுரித்து விட்டால் அதற்காகக் கர்வம் ஏற்றிக்கொள்வதா?'' ''உன்னை யார் இங்கு கூப்பிட்டது நியாயம் பேச? உனக்குத்தான் வாய் இருக்கிறதென்ற மாதிரி அதிகப் பிரசங்கம் செய்யத் தொடங்கி விட்டாய்!'' என்று கடிந்தேன் நான்.

ராஜி மீண்டும் ஒரு புன்னகை புரிந்து கொண்டே, ''இந்தாருங்கோ! இதற்கெல்லாமா இத்தனை கோபம்? அடேயப்பா, இப்படியானால் ஆயிரம் தடவை பிரயத்தனப்பட்டாலும் ஒரு கட்டுரை முடிவுபெறாது, தெரியுமா?'' என்று சொல்லிக் கொண்டு வந்து என் பக்கத்தில் உட்கார்ந்தாள். ஏதோ ஒரு நாடகத்துக்கு ஆயத்தப்படுத்துகிறாள் என்பது எனக்குத் தெரியும். நான் சொன்னேன், ''ராஜி, உன்னை ஆயிரம் தடவை வேண்டுமானாலும் கேட்டுக்கொள்கிறேன். உனக்கு என்ன தேவை இப்போது என்று சொல்லித் தொலைத்து விட்டுக் கொஞ்சம் என்னை நிம்மதியாக இருக்க விடேன்.''

''அப்படி வாருங்கோ! நல்ல குழந்தையைப் போலப் பேசுவதை விட்டுச் சும்மா சீறி விழுந்தால் காரியம் எதுவும் ஆகிவிடுமா?'' என்றிடித்தாள் அவள். தனது காரியங் கைகூடுவதற்கு அவள் இம்மாதிரிப் பல தடவைகளில் சாமர்த்தியமாக நடந்து கொள்வாள். அதன்பின் ராஜி தொடர்ந்து சொன்னதுதான் என்னைத் திகைக்கச் செய்தது: ''கேட்டியளா! அன்று நாம் இரண்டு பேரும் அனுப்பினோமோ இல்லையோ இரண்டு கட்டுரைகள்! அதிலே எனது கட்டுரைதான் போட்டிக்கு ஏற்கப்பட்டிருக்கிறதாம். உங்களது....'' என்று அவள் சொல்லி முடிக்குமுன் நான் குறுக்கிட்டு, ''சும்மா அலட்டாதே. வெறும் பொய் சொல்லும் பழகி விட்டாய்'' என்றேன்.

ராஜியின் முகம் திடீரென்று மாறியது. அந்தச் சொற்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை. ''நானா பொய் சொல்லுகிறேன்? இதோ பாருங்கள் கடிதத்தை!'' என்று சொல்லி என் முன்னால் ஒரு கடிதத்தை வீசி எறிந்துவிட்டு ஒரு மிடுக்கான நடை நடந்து வெளியேறினாள். போகும்போது வாசலில் சிறிது நின்று ஒரு பார்வை பார்த்தாள் போலிருந்தது. அவள் நின்ற நிலையைப் பார்த்தேனேயொழிய ராஜியின் முகத்தை நான் பார்க்க வில்லை.

ஆம், என் மனைவி சொன்னது உண்மைதான். அந்தக் கடிதத்தில் அது எழுதப்பட்டுத்தானிருந்தது. நான் எழுதிய அந்தக் கட்டுரை எத்தனை இரவு நித்திரையின்றித் திருப்பித் திருப்பிப் பாடுபட்டெழுதிய அருமை யான சிறுகதை - போட்டியிலே ஏற்கப்படத் தானும் அருகதை அற்றதாம்! குப்பைக் கூடைக் குள்தான் போடத் தகுந்ததாம். ஆனால் அவள் எழுதியது - அந்தப் பேதைப் பெண்ணொருத்தி எழுதியது - வெறுங் குப்பையுங் கூழமும் - அவர்களுக்குப் பிடித்திருக்கிறதாம்! என்னவிபரீதம்? கொஞ்சமும் நாகரீகம், பழக்க வழக்கங்கள் தெரியாத முட்டாள்கள் இந்தப் பத்திரிகாசிரியர்கள்! ஒரு வீட்டில் ஒரு குடும்பத்தில் புருஷனும் மனைவியும் எழுதிய கட்டுரைகளில் இப்படித் தாரதம்மியம் இல்லாமல் நடத்துவது நன்றாயிருக்கிறதா? கட்டுரைகளின் குண விஷேசங்களை இப்படியும் எந்தக் கழுதைகளாவது மோசமாக மதிப்பார்களா? அதிலும் கட்டுரை கூடாவிட்டால் பேசாமல் திருப்பி அனுப்புவதை விட்டு இம் மாதிரி மரியாதைக் குறைவாகக் குறிப்பெழுத வேண்டுமா?

எனக்குப் பொறுக்க முடியாத மனவேதனையாயிருந்தது. அதுவரை நான் எழுதிக்கொண்டிருந்த கடதாசிகளைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து ஒரு மூலையில் எறிந்தேன். எறிந்த பின்னும் எனக்கு ஆத்திரம் தீரவில்லை. எழுந்து போய் அந்தத் துண்டுக் கடதாசிகளையெடுத்து நெருப்பு மூட்டினேன். அதுதான் எனக்குத் திருப்தியளித்தது. இனி எழுதித்தான் பிரயோசனமென்ன? இவ்வளவு பாடுபட்டு நான் எழுதிய உன்னதமான கதை என்று எழுதியனுப்பிய கட்டுரை, அவள் எழுதிய ஒரு வெறும் சாரமற்ற - நயமற்ற - கட்டுரைக்குத் தோற்றுவிட்டது. அது மாத்திரமா? கட்டுரை நயமற்றதெனத் தள்ளிவைத்தால் போதாதா? அதற்கு ஒரு குறிப்பும்! ''இந்தப் பஞ்சகாலத்திலே இம்மாதிரி உதவாத கட்டுரைகளை எழுதிக் கடதாசியை வீணாக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்!'' எப்படியிருக்கும் பாருங்கள்! இதற்கு ஒரு நாகரீகமான யுத்தகால ஹாஸ்யமொன்று தேவையோ? இந்தப் பத்திரிகாசிரியர்மாரை எல்லாம் திரட்டி யுத்தமுனைக்கனுப்பிப் பீரங்கி வாயில் வைத்துவிட்டால் என்ன என்றிருந்தது எனக்கு!

பேசாமல் எழுந்துபோய்க் கட்டிலின் மேற் படுத்துக்கொண்டேன். ஆனால், அதிகம் ஆத்திரப்பட்டால் அது பொறாமை என்பதை ராஜி அறிந்து கொண்டு மனங்கோணி விடுவாள் என்றும் எனக்குப் பயமாய் இருந்தது. எப்படியாவது அதைச் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்று நான் சிறிது நித்திரை கொள்ளப் பிரயத்தனப்பட்டேன்.

அறையின் கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது. மெதுவாகக் கண்களைக் கொஞ்சம் போலத் திறந்து பார்த்தேன். ராஜிதான் அங்கு தோற்றினாள். ஆனால் அவள் முகத்தில் முன்னைய குறும்பும், அதிகார தோரணையும் காணப்படவில்லை. பயமும் இரக்கமும் காணப்பட்டன. சந்தடி செய்யாமல் அவள் வந்து படுக்கையின் மேல் உட்கார்ந்து கொண்டே, ''என்ன, உடம்புக்கு ஏதாவது செய்கிறதா?'' என்று கேட்டாள். அவளுடைய குரலில் மிகுந்த கனிவு சொட்டியது. கண்களில் இரக்கமும் பச்சாத்தாபமும் அப்படியே எழுதப்பட்டிருந்தன. முகத்தைப் பார்த்ததும் என் இருதயம் குழைந்து விட்டது. நான் இத்தனை நேரமும் மனம் புழுங்கியதற்கு, பொறாமை கொண்டு எரிந்ததற்கு, இது ஒரு தண்டனை போலிருந்தது எனக்கு. அவளுடைய இனிய சுபாவமும் இன்சொற்களும் என்னிருதயத்தை ஈட்டிபோலுறுத்தின. அவள் தாராளத்தை என்னாற் பொறுக்கமுடியவில்லை. ''என் உடம்புக்கு ஒன்றும் செய்யவில்லை, ராஜி. சும்மாதான் படுத்திருக்கிறேன். கொஞ்சம் களைப்பாயிருக்கிறது, அவ்வளவுதான்'' என்றேன். ஆனால் என் வஞ்சக நெஞ்சை அவள் அறிந்தாளானால்?

''அப்பா! நான் என்னவோதான் என்று பயந்துவிட்டேன். இதுதானா? எழுந்திருங்கள், கொஞ்சம் காப்பி போட்டு வைத்திருக்கிறேன். சாப்பிட்டுவிட்டுக் கடற்கரையிற் போய்ச் சிறிது உலாவினால் எல்லாம் சரியாய்ப் போய்விடுகிறது!'' என்று அவள் தன் வழக்கமான கிள்ளை மொழியில் கொஞ்சினாள்.

* * * *

ராஜேஸ்வரியை மணந்து ஒரு வருடந் தானாகிறது. நான் பத்திரிகைகளுக்கு எழுதுவது அவளுக்கு அளவற்ற பிரியம். முன் இரண்டொரு தடவைகளில் என் கதைகளை அவள் புகழ்ந்து பாராட்டியிருக்கிறாள். ஐம்பது ரூபா ஒரு நாள் ஒரு 'செக்'காக வந்து கிடைத்தது எனக்கு. அதைப்பற்றி ராஜி எத்தனை பேருக்குத்தான் பெருமையோடு சொல்லித்திரிந்தாள்! தனது கணவன் பிரபல எழுத்தாளராய் இருப்பது எந்தப் பெண்ணுக்கும் பெருமையாகவிருக்குந்தானே! ராஜேஸ்வரி ஒரு இலக்கியப் பிரியை. நல்ல ரஸிகத் தன்மையும் விமர்சனத் திறமையும் உள்ளவள். ஒரு கட்டுரையில் இன்ன இடம் சுவைக் கும், இன்ன இடம் அழகாயில்லை என்று அளவிடு வதில் கெட்டிக்காரி. ஆனால் அவள் எழுதப் பழகி யிருக்கவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை; அதுதான் காரணம்.

ஒரு நாள் மிக ஆவலோடு அவள் என்னிடம் வந்து, ''நான்கூடக் கட்டுரை எழுதப்போகிறேன்'' என்றாள். எனக்குச் சிரிப்பு வந்தது. ''நீ மாத்திரமா, எத்தனையெத்தனையோ பேர்தான் கட்டுரைகளும் கதைகளும் எழுதுகிறார்கள் பத்திரிகைகளுக்கு. ஆனால் பிரசுரமாக வேண் டாமா.'' என்று குத்தலாய்க் கூறினேன்.

''பூ! எனக்கென்ன எழுதத் தெரியாதா? நன்றாயிராதா? பார்க்கிறேன் ஒருகை'' என்று சொல்லி ராஜேஸ்வரி பேனாவை எடுத்து எழுதத் தொடங்கினாள். ஒரு மணி நேரம் பேனாவை வாயில் வைத்துக் கடித்ததைத் தவிர அவளால் அதற்குமேல் ஒன்றும் செய்யமுடியவில்லை.

நான் இதில் பிரவேசிப்பதில்லையென்று தீர்மானித்தேன். பிரவேசித்து உதவி செய்வதும் ராஜிக்குப் பிடிக்காது. 'உன் எண்ணம்' என்று சொல்லி விட்டுவிட்டேன்.

* * * *

கடற்கரையில் உலாவிவிட்டு ஒரு வாங்கிலே சிறிதுநேரம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். நிலவு அப்பொழுதுதான் புறப்பட ஆயத்தமாயிருந்தது. அங்கு நடமாடிக்கொண்டிருந்தவர்களில் இரண்டொருவரைத் தவிர மற்றவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். கடலலைகள் ஒன்றையொன்று விட்டுத் துரத்தி மோதி விளையாடின. அதிலிருந்தெழும் நுரையைப் பார்த்துக்கொண்டே நான் சொன்னேன், ''ராஜி, நீ அதிஷ்டசாலிதான்'' என்று.

ராஜியின் முகத்தில் ஒரு முல்லைக் குறுநகை தோன்றியது. ''சும்மா ஏன் முகஸ்துதி கூறுகிறீர்கள்? அப்படி எனக்கேதாவது அதிஷ்டம் இருந்தால் அதில் பாதி உங்களுக்குந்தானே'' என்றாள் அவள்.

''அதெப்படிச் சொல்வாய்? உன்னுடைய உருவகத்தினால் நீ வெற்றி பெறுகிறாய். நானோ அவ்வளவு அறிவாளியல்ல. எனது கட்டுரைதான் குப்பைக்கூடைக்குள் போய்ச் சேர்ந்துவிட்டதல்லவா? உனது கட்டுரை போட்டியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனி அது பரிசு பெறுவது நிச்சயம். இந்தப் பெருமை உனக்கா எனக்கா?''

''நிச்சயமாய் எனக்குத்தான்!'' என்றாள் ராஜி. இப்பொழுது எங்கிருந்தோ அகங்காரமும் பெருமையும் அவளுக்கு வந்து சேர்ந்தன. கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். எனக்கு இந்த நிலை ஆச்சரியமாகத்தானிருந்தது. பின்னும் அவள், ''அதெல்லாம் பாருங்கோ, அதிஷ்டம் கிதிஷ்டம் ஒன்றுமில்லை. நானனுப்பிய கதை உண்மையில் விசேஷமானதுதான். அதில் வரும் கதாபாத்திரங்கள் உயிருள்ளவை. வெறுமனே கதைக்காகச் சோடிக்கப்பட்ட பொம்மைகளல்ல. ஜீவன் நிறைந்த கதை அது. நீங்கள் தான் பார்த்தீர்களே, அதில் கிருஷ்ணமூர்த்தி என்ற கதாபாத்திரத்தின் வாயினால் எவ்வளவு உலகானுபவங்களை, நீதிமொழிகளை எடுத்துப் புகட்டப்பட்டிருக்கின்றது என்று!''

''அது பழையகால சம்பிரதாயம். இந்த நாட்களிலே இப்படி நீதி வாக்கியங்களும் முதுமொழிகளும் சனங்களுக்குப் பிடிக்காது. நேரே விஷயத்தைச் சொல்லிவிட வேண்டியதல்லாமல் பிரசங்கம் செய்து கொண்டிருந்தால் அலுப்புத் தோற்றிவிடும்.''

''அதெல்லாமில்லை. சொல்லும் பாவனையில் தங்கியிருக்கிறது அது. குழந்தைகளுக்குச் சர்க்கரையில் வைத்து மருந்தையும் சேர்த்துக் கொடுத்து விடுகிறார்களல்லவா? அது மாதிரி லேசாக ஒவ்வொன்றையும் புகுத்திவிட்டால் போகிறது''

''துப்பறியும் அந்தப் பெண் இவ்வளவு பயங்கரமான -நம்பத்தகாத - காரியங்களைச் செய்வது இயற்கைக்கு மாறாகவில்லையா? கதை யென்றால் கற்பனையைக் கடந்து விடுவதா?''

''யாரோ சில நவயுக எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்ளும் போலி விமர்சனக்காரர் கதைகளை நம்பிக்கொண்டு என்னுடன் வாதாட வந்துவிட்டீர்களாக்கும்! எது இயற்கை, எது தான் இயற்கையில்லை என்று உங்களால் வரையறுத்துச் சொல்லமுடியுமா? தெருவிலே போனவனை மோட்டார் அடித்து விழுத்தினால் அது இயற்கை, ஆனால், மோட்டார் ஒருவன் மேல் தாக்கிவிட அந்த மோட்டாருக்கே காயமென்றால் இயற்கையல்ல என்று சொல்வீர்களாக்கும்? ஏன், அம்மாதிரி ஒரு சம்பவம் சில நாட்களுக்கு முன் கொழும்பில் காலி றோட்டிலே நடைபெற்றதை நீங்கள் பத்திரிகையில் படிக்கவில்லையா?''

''சரி, சரி, உன் கட்டுரைதான் தரமானது'' என்று சொல்லி நான் கதையை அதிகம் வளர்க்க விரும்பவில்லை.

ராஜீ விடுவதாயில்லை. ''நீங்கள் எழுதிய 'கண்ணீர்கடல்' தான் திறம் என்று சொல்லவும் எண்ணமோ?'' என்று கிண்டத் தொடங்கினாள் அவள். ''உங்கள் கதாநாயகிதான் என்ன தீரச் செயல்களைச் செய்து விட்டாள்? சதா அழுத மூஞ்சி. அடுக்கடுக்காத் துன்பங்கள். கடைசியாக ஆற்றிலே விழுத்தி விட்டீர்கள்! கொஞ்சமும் தாக்ஷண்யமற்ற மனிதர் நீங்கள்! இது ஒரு சம்பிரதாயமாம் இந்தக் காலத்தில். சில வங்காளக் காரரைப் பின்பற்றி யாராவது ஒரு இளம் பெண்ணைக் கொண்டுபோய் ஆற்றிலோ குளத் திலோ தள்ளிக் கொன்றுவிடுவதுதான் சிறுகதைகளுக்கு லக்ஷியம் என்று கைக்கொண்டிருக்கின்றார்கள்! துக்க சமாச்சாரம் நிறைந்ததுதான் உணர்ச்சிகளைத் தட்டிவிட்டு அனுதாபத்தை வருவிக்கும் என்ற நோக்கமாம்! ஆகத்தான் என்ன பெண்கள் பிசாசுகளா இப்படிக் கோரப்படுத்துவதற்கு?''

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம் பார்க்க)

# கவிஞர்களுக்குத் திமிர் வேண்டும்



''கவிஞர்களுக்குத் திமிர் வேண்டும். அவர்கள் தமது விவாதிக்கும் திறனை நன்கு வளர்த்துக்கொள்ளவேண்டும்.

''கவிஞர்கள் விவாதிக்கும் திறனை வளர்த்துக்கொள்ளவேண்டும். நாம் எழுதியது சிறந்த கவிதைதான் என்ற நம்பிக்கை வேண்டும். உலகின் மிகச்சிறந்த கவிதையைப் படைக்கவே நான் பிறந்திருக்கிறேன் என்ற திமிர்தான் உங்களை மேம்படுத்தும். உங்களில் பலருக்கு சங்க இலக்கிய ஆளுமை குறைவாக இருக்கிறது என்று உணர்கிறேன். இரண்டாம் நூற்றாண்டு இலக்கியத்தைப் படிக்காமல் 21ஆம் நூற்றாண்டுக் கவிதைகளைப் படைக்கமுடியாது.

பலர் புதிதாகக் கவிதை எழுதத் தொடங்கியிருக்கிறீர்கள். ஆனாலும், அடைமொழிகளுக்குள் கவிதைகளைத் திணித்துச் சிதைக்காமல், மொழியைச் சிக்கனமாகப் பயன்படுத்தியது எனக்கு வியப்பளிக்கிறது. நல்ல கவிதை என்பது, எந்த மொழியில் மொழி பெயர்த்தாலும் வடிவமோ, பொருளோ சிதையக்கூடாது. எந்தக் கவிதையிலும் கவிஞனின் அடையாளம் தெரியக்கூடாது. இந்த 100 பேரில் 10 பேர், அப்துல் ரகுமானைத் தமிழன்பனை, வைரமுத்துவை, மேத்தாவை ஈடுகட்டும் அளவுக்கு வருவீர்கள் என்று நம்புகிறேன்''

**கவிஞர் வைரமுத்துவின் மனதிலிருந்து...**

(தமிழக வார இதழ் ஒன்று நடத்திய வாசகர் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் அவர் நீண்ட உரையாற்றியிருந்தார்)

# இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!

## யாழ்ப்பாணத்திலும் உயர் நீதிமன்றம் 1811 நவம்பரில் இயங்கத் தொடங்கியது

1811 நவம்பர் எட்டாம் திகதி இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம். இலங்கை உயர் நீதிமன்றம் (Supreme Court) இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கொழும்பில் பிரதம நீதியரசர் (Chief Justice) தலைமையில் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் உயர் நீதிமன்ற உதவி நீதியரசர் (Puisne Justice) தலைமையில் ஒன்றுமாக உயர் நீதிமன்றம் இரு பிரிவுகளாகச் செயற்பட்டது. சுப்றீம் கோர்ட்டை உச்ச நீதிமன்றம் எனவும் அழைக்கின்றனர்.

நீதித்துறையின் அதியுயர் பீடமாக உயர் நீதிமன்றத்தைக் கருதவாம். சுப்றீம் கோர்ட்டுக்கு மேல் எதுவுமில்லை. சுப்றீம் கோர்ட் தீர்ப்பே இறுதியானது.

உலகில் பெரும்பாலான நாடுகளில் சுப்றீம் கோர்ட் ஒன்றுதான் உள்ளது. இலங்கையிலும் தற்போது சுப்றீம் கோர்ட் ஒன்று மட்டுமே உண்டு.

காணிச்சண்டை, எல்லைச்சண்டைகளுக்காக சுப்றீம் கோர்ட் வரை சென்று வாதாடியவர்கள் யாழ்ப்பாணத்தில் மிகப் பலர். இவர்கள் அனைவரும் பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்து கொழும்பு சென்றே சுப்றீம் கோர்ட்டில் வாதாடினர்.

உயர் நீதிமன்றத்தைக்கூட இரண்டு பிரிவுகளாகப் பிரித்து நிர்வாகம், நடத்தியமை பிரித்தானியரின் அதிகாரப்பரவலாக்கலின் உச்சமென்றே கூறலாம். ஒரு நாட்டில் இரண்டு உயர் நீதி மன்றங்கள், கேட்கவே ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா?.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



ஹிர்சன்
11.11.2007




மணிமாறன் ஜனனி தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
ஹிர்சன்

இன்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் முதலாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, தங்கை தாட்ஷா அனைவரும் ஹிர்சன் குட்டியை வெள்ளைப் பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு. (67751)

தகவல்:-
மஞ்சு மாமா.

## BIRTHDAY MEMORIAL



**YOGASINGHAM SATHYENDRA**
(B.Sc(Hons) AAIQS COST ENG.
Quantity Surveyor)

ARRIVAL
11.11.1969

DEPARTURE
28.06.2007

The radiant light
that emerged 37 years ago today
to illuminate our home
with infinite filial- love; joy;and hope
has now gone out of our reach
leaving perpetual agony
that daily eats into our body and soul.
The life without you is a life
not worth living
yet we do live.
You gave us your all and
finally you have taken all away from us
Loving Parents.

"SEETHEVI",
ATCHUVELY NORTH, ATCHUVELY. (67769)

## இறைச்சிக் கோழி விற்பனை

பு்றொயிலர், கல் பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
23-05-1972



மறைவு
28.09.2007

அமரர்
**சுதர்ஜினி கிருபாகரன்**

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறுகின்றது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

தங்கள் பிரிவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

## பரிசுக் கட்டுரை....

( 7ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னால் முடியாது. 'வழவழ' என்று வாயுளையாமல் பேசிக்கொண்டிருப்பாய். வா வீட்டுக்குப் போகலாம், நேரமாகிவிட்டது'' என்று சொல்லிக் கொண்டு எழுந்தேன் நான்.

''முடியாது, நீங்கள் மரியாதையாகத் தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள். என்னுடைய கட்டுரைதான் விசேஷமென்று சொல்லுகிறீர்களா இல்லையா?'' என்று ராஜி பிடிவாதமாக நின்று கொண்டாள்.

வேறு வழியில்லை. நான் தோல்வியை ஒப்புக்கொண்டுதானே ஆக வேண்டும்? ஆத்திரம் உள்ளே கிடந்து அறுத்துக்கொண்டிருந்தது. அந்தப் பெருமைக்காரியோ விடுவதாயில்லை வாக்குவாதத்திலிருந்து தப்புவதற்காக ''ஆமாம், உனது கட்டுரைதான் விசேஷம்'' என்று சொல்லி விட்டு நடந்தேன். ராஜி தனக்கு வந்த சிரிப்பையடக்கிக் கொண்டு பக்கத்தில் நடந்தாள்.

* * * *

வருஷப்பிறப்பு நெருங்கி விட்டது. அன்றொரு நாள் கடைத் தெருவிலே பார்த்துவந்த ஜரிகை போட்ட பட்டுப் புடவையை வாங்கித்தர வேண்டுமென்று ராஜி இட்ட கட்டளையை எப் படி நிறைவேற்றுவதென்று ஆலோசித்துக் கொண்டே காலையில் எழுந்து எனது நண்பன் ஒருவனைக் காணச் சென்றுவிட்டேன். எனக்கு மனம் நிம்மதியாயில்லை. மாதத் தொடக்கத்தில் சம்பளமெடுத்து அது முழுவதும் கடன்காரருக்குப் போய் விட்டது. இப்பொழுது வருஷப்பிறப்புச் செலவுக்கு யாரிடம் போவது? ராஜிக்கு ஒரு புடவையாவது எடுத்துக் கொடாவிட்டால் அவள் இருக்க விடமாட்டாள். என்ன செய்யலாம் என யோசித்துக் கொண்டே நடந்தேன்.

மணி பத்தாகிவிட்டது வீடு திரும்பும்போது. வாசலில் என்னை எதிர்பார்த்தபடி நின்றாள் ராஜி. அவள் முகத்தில் ஒரு ஆவல் துடித்துக் கொண்டிருந்த போதும் அவள் அதைப் பாடுபட்டுச் சமாளிக்கப் பார்த்தாள். அவளையறியாமல் சிரிப்பு வந்தது. கண்கள் துடித்தன. கைகளிரண்டும் பின்னாலே ஏதோ ஒரு பொருளை மறைத்து வைத்திருந்தன. நான் வாசலினுள்ளே காலெடுத்து வைத்ததும், ''இவ்வளவு நேரமாக எங்கே போயிருந்தீர்கள்'' என்றாள் அவள்.

''அதெல்லாம் உனக்குச் சொல்லிக் கொண்டிருக்கத்தான் வேண்டுமோ?'' என்று கேட்டுக் கொண்டே நான் போய் ஒரு நாற்காலியில் அமர்ந்தேன். ராஜியும் கூட வந்து அந்த நாற்காலியின் சட்டமொன்றில் உட்கார்ந்து கொண்டே ''இதைப் படியுங்கள்!'' என்று சொல்லி ஒரு பத்திரிகையை என் மடியில் விரித்து வைத்தாள்.

அந்தப் பக்கத்தை நான் பார்த்ததும் அப்படியே ஸ்தம்பித்துப் போனேன்!

''சிறுகதைப் போட்டி முதலாவது பரிசு ரூபா நூறும் 'கண்ணீர்க் கடல்' என்ற கட்டுரை எழுதிய ஸ்ரீமதி ராஜேஸ்வரிக்கு அளிக்கப்பட்டுள்ளது.''

''அடி திருடி! என்ன காரியம்........'' என்று நான் ஏதோ பேசுவதற்கு ஆரம்பிக்க விடாமல் ராஜி என் வாயை இறுகப் பொத்திக் கொண்டாள்! பிறகு என் தோளிற் சாய்ந்து காதோடு காதாக, ''அதற்கென்ன, உங்கள் பெருமையை நான் - உங்கள் மனைவி - திருடிக்கொள்ளலா காதா? அப்பொழுது நீங்கள் என்னிடம் தபாலில் சேர்க்கும்படி தந்தபோது நான் பெயர்களை மாற்றி எழுதிவிட்டேன்! அதற்கு நஷ்டஈடு வேண்டுமானால் இந்தாருங்கள்!'' என்று சொல்லி என் கையில் நூறு ரூபா செக் ஒன்றைக் கொடுத் தாள் ராஜி!

''இதற்காகத்தானா இத்தனை நாட்களும் உன் கட்டுரையைப் பற்றி ஏதோ பிரமாதமாகப் பேசிக்கொண்டு திரிந்தாய்? என்று நான் கேட்டேன்.

''நானா சொன்னேன். நீங்கள்தான் அன்றொரு நாள் என்னுடைய கட்டுரையே விசேஷமானதென்று உங்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லையா? இப்போது நான் சொன்ன புடைவையை மாத்திரம் மறந்து போகவேண்டாம்'' என்று சொல்லி அந்தக் குறும்புக்காரி கலகலவென்று சிரித்துக்கொண்டே சமையலறைக்குள் ஓடிவிட்டாள். கடைசியாக, எனது கட்டுரைபெற்ற பெயரும் பரிசும் அவளுக்குத் தான்! நான் தோல்விதானே?

(1940 ''ஈழகேசரி ஆண்டுமலர்'')

## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்களை யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

| கொழும்பு யாழ். | SUB DEALERS | யாழ். கொழும்பு |
|---|---|---|
| 1Kg 250/= | தேவை | 1Kg 200/= |

**EURO GROUP OF COMPANIES**
35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998,
0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963 (C54198)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம்
06.11.1935

மறைவு
12.10.2007

திருமதி
**சிவகுரு பரிமளம்**

பத்துத் திங்கள் எமைச் சுமந்து
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பார் புகழ நாம் வாழ வழி வகுத்த
அன்னையே! அம்மா!
ஓடி நீங்கள் சென்ற நாள்
ஒரு திங்கள் ஆனதம்மா
இன்று போல் இருக்குதம்மா
எமையணைத்த காட்சியெல்லாம்
நினைத்து நாம் அழுகின்றோம்
நித்திரை இன்றித் தவிக்கின்றோம்
படைப்பினிலே இறப்பும் உண்டு - இது
பரமசிவன் விளையாட்டு
பெற்றவளைப் பிரிந்துவாழும்
பெரும் பாவி நாங்களம்மா
ஓடி நீங்கள் எம்மிடம்தான்
எந்நாளில் வருவாயோ? - உன்
ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து பங்கு கொண்டோர், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்:
சி.முருகானந்தன் (மகன்)
ம.ஜெகனி (மருமகள்)

இல. 56/5, நாமகள் லேன்,
கொக்குவில். (67510)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மின்சாரம் என்பது மக்களின் வாழ்வியலோடு இன்று இரண்டறக்கலந்துவிட்ட ஒன்று. கல்வி, கலாசாரம், தொழில், குடும்பம், கோயில்வழிபாடு என்று எல்லா அம்சங்களிலுமே மின்சாரம் அவசியமாகத் தேவைப்படுவதாகிவிட்டது. எனவே இதனை மக்களுக்கு சீராக வழங்கி, ஓர் ஒழுங்குமுறையில் நிர்வகிப்பது அரசின் கடமை; அதிகாரிகளின் பொறுப்பு. ஆனால் குடாநாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை; எவருக்குமே புரியவில்லை. சீரற்ற மின்சார விநியோகத்தைவிட மின்சார விநியோகமே இல்லை என்று இருந்து விடலாம் போலிருக்கிறது என்கிறார் திருவாளர் பொதுசனம்!*

# சீரற்ற மின்சார விநியோகத்தால் சீர்குலையும் மக்கள் வாழ்வியல்

குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மின் விநியோகம் பலரையும் சீற்றம் கொள்ள வைத்துள்ளதுடன் பல்வேறு வழிகளில் பாதிப்புக்களையும் ஏற்படுத்திவருகின்றது.

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த மின் வெட்டினால் பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பினரும் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

எனினும் இந்த மின் வெட்டைத் திருத்தி அமைப்பதற்கு இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளமை பலரையும் விசனத்துக்கு ஆளாக்கி இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மின்சார சபை விநியோகம் மேற்கொள்ளப்பட்டுப் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் இப்போது முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதே சமயம் சில இடங்களில் எப்போது மின்சாரம் தடைப்படும். எப்போது மீண்டும் கிடைக்கும் என்பதே தெரியாமல் இருக்கிறது.



### அதிகாரிகளின் தொடர் மௌனம்

மின் வெட்டுத் தொடர்பாக மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படுத் தாமல் குடாநாட்டு மின்சார சபை தொடர்ந்தும் மௌனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றமை மக்களை மேலும் ஆத்திரமுற வைத்துள்ளது.

குறிப்பாக இரவு வேளைகளில் சுமார் மூன்று நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக இந்த மின் வெட்டு நீடிப்பதன் காரணமாகக் குடாநாட்டு மாணவர்களின் கல்வி கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அந்த நேரங்களில் கொள்ளைக் காரர்கள் வீடுகளில் புகுந்து சொத்துக்களைச் சூறையாடிச் செல்வதற்கு இது வசதியாகவும் அமைந்துவிடுகின்றது.

அதிகாரிகளும் இது விடயத்தில் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றமை தொடர்பாகப் பொதுமக்கள் பலர் நியாயமான கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

மின் வெட்டு மேற்கொள்ளப்படுவது குறித்து மின்சார சபை உயரதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டால் உரிய பதில் எதுவும் கிடைப்பதில்லை. அவர்கள் ஏதோ சாட்டுப்போக்குக் கூறித் தட்டிக் கழித்துத் தப்பிக் கொள்ள முயற்சிப்பதுபோல் தெரிகின்றது.

இப்போது குடாநாட்டு மக்களின் வாழ்க்கையில் மின் விநியோகம் ஓர் அன்றாட அல்லாட்டமாகிவிட்டது. மின் வெட்டு அமுலில் இருக்கும் வேளைகளில் வேறு சில இடங்களில் 24 மணி நேரம் மின்

**யாழ்மைந்தன்**

குடாநாட்டில் உள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அரசு தொடர்ந்து கூறிவருகின்றது. இந் நிலையில் இங்கு மின்சார விநியோகம் சீராக இல்லை. அதனால் மக்கள் வாழ்வியல் சீர்குலைந்து போகின்றது என்ற உண்மை அரசுக்குத் தெரியாமல் உள்ளதா எனப் புத்திஜீவிகள் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குடாநாட்டில் பல பிரதேசங்களில், ஊர்களில் தினமும் மாலை 6 மணிக்கு நிறுத்தப்படும் மின்சாரம் பின்னர் இரவு 9.30 மணிக்குப் பின்னரே கிடைக் கிறது. ஒரு சில பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதி களில் இந்த மின்வெட்டு மேற்கொள்ளப் படுகின்றது.

மாணவர்களும் இந்தநேரத்திலேயே விழித்திருந்து தமது கல்விச் செயற்பாடுகளை மேற் கொள்கின்றார்கள். அந்த நேரம் பார்த்து மின்சாரம் தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி முற்றாகப் பாதிக்கப்படுகிறது.

குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் மின்சாரம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. தொலைக் காட்சி பார்த்தல், கணனிப் பயன்பாடு என்பன உட்படப் பல்வேறு செயற்பாடுகளுக்காக மக்கள் அன்றாடத் தேவைகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.

பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி

## அரசு அக்கறை கொள்ளுமா? அதிகாரிகளின் மௌனம்தான் கலையுமா?

மாணவர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில் கணனிப் பாவனை மிகவும் அத்தியாவசியமாகியுள்ளது. பல்வேறு பாடவிதானங்களைக் கணனிகள் மூலம் கற்கும் நடைமுறை மாணவர்களிடையே இப்போது தீவிரமாகப் பரவியுள்ளது. விசேடமாக ஜீ.சி.ஈ.சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்கள் சி.டிக்களைப் பயன்படுத்தி தமது கற்றலை இலகுவாக்கிக் கொள்கிறார்கள்.

இவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு இந்த மின் வெட்டுபெரும் தடையாக அமைந்துள்ளது.

### கைவிளக்கை நாடும் மாணவர்கள்

இது தொடர்பாகப் பல பாடசாலை மாணவர்கள் தமது முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர். தற்போதைய மின் வெட்டுக் காரணமாகத் தாம் மீண்டும் 10 வருடம் பின்நோக்கிச் சென்று கைவிளக்கில் கற்கும் நிலைக்கே தள்ளப்படக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கின்றனர்.

### ஜீ.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை வருகிறது

மாணவர்களுக்கான ஜீ.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு இன்னும் மூன்று வாரங்களே உள்ளன. இதனால் பல மாணவர்கள் மின்சாரம் வரும்வரை காவல் இருக்காமல் கை விளக்கில் கற்கத் தொடங்கிவிட்டார்கள். மின்சார வெளிச்சத்தில் கல்வி கற்றுப் பழகிய மாணவர்கள் கைவிளக்கில் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக அவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் அவர்களின் கண் பார்வை பாதிப்புறும் என்ற அச்சத்தையும் அவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

பரீட்சை நேரங்களிலாவது மின் விநியோகத்தை ஒரு சீரான முறைக்குள் கொண்டு வரமுடியாதா எனப் பல பெற்றோர் அழாக்குறையாக 'உதயனிடம்' முறையிட்டுள்ளனர்.

### கல்வியைச் சீரழிக்கும் மின் வெட்டு

தென்மராட்சியைச் சேர்ந்த மாணவன் ஒருவன் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் - மாலை 6 மணிக்கு துண்டிக்கப்படும் மின்சாரம் இரவு 9.30 மணிக்குப் பின்னரே கிடைக்கின் றது. இதனால் பெரிதும் பாதிக் கப்படுபவர்கள் மாணவர்களே. ஜி.சீ.ஈ. சாதா ரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இந்த மின்வெட்டி னால் மாணவர்களின் பரீட்சை ஆயத்த நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடங்களை மீட்டுப் பார்க்கவும் ஏனையவற்றைக் கற்கவும் முடியாமல் உள்ளது. தற்போதுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். அத்துடன் இந்த மின் வெட்டும் சேர்ந்து கொண்டு மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து மாணவர்களின் கல்வி சிறப்படைய ஆவன செய்ய வேண்டும் - என்றார்.

(10 ஆம் பக்கம் பார்க்கவும்)

# தமிழர் மீதான விரோதப் போக்கை வெளிப்படுத்தும் வரவு - செலவுத் திட்டம்

– கடந்த புதன் கிழமை இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் (பட்ஜெட்) குறித்து மக்கள் பார்வை இது...

**பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*(யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர்)*



*கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி யால் சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத் தில் கிராமிய மட்டத்தில் இருந்து தேசியமட்டம் வரையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தில் அடிப்படைப் பெருமளவு ஒதுக்கீடு பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை அவர்கள் முதன்மையாகக் கொண்டுள்ளனர். கல்வி, சுகாதாரம், சமூக நல சேவைகள் போன்றவைகளுக்கு ஏனைய நாடுகள் கொடுக்கும் முக்கியத்துவம் இங்கு வழங்கப்படவில்லை.*

*இங்கு உயர்கல்வி மிகவும் சிக்கலான நிலையில் உள்ளது. வருடம் ஒன்றிற்கு பதினேழாயிரம் வரையான மாணவர்களுக்கே உயர்கல்வி கிடைக்கிறது. பல்கலைக்கழகம் மற்றும் வெளிவாரியாக வருடம் ஒன்றுக்கு இருபதாயிரம் பட்டதாரிகள் வரை வெளியேறுகிறார்கள். 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்களைவிட க.பொ.த. சாதாரண, உயர்தர சித்தியடைந்தவர்கள் மற்றும் அதற்குக் குறைவான தகைமைகளைக் கொண்டவர்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.*

*வாழ்க்கைச் செலவு மக்களுக்குப் பாரிய சுமையாக உள்ளது. தோட்ட மக்களுக்கெனச் சில சலுகைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குறிப்பாக யாழ்.குடாநாட்டுக்கு விசேட ஒழுங்குகளைச் செய்திருக்கலாம். இந்த மக்களின் உண்மையான பாதிப்பை உணராதது யாழ். மக்களுக்குப் பெரிய ஏமாற்றமாகும். ஏற்கனவே யாழ்ப்பாணத்திற்கு ஒரு பயன்படக்கூடிய பொருளாதாரப் பெட்டகம் தேவை என்பதை வலியுறுத்தி வந்துள்ளோம்.*

*விவசாயிகளுக்கும் பெரிய அளவில் நன்மைகள் இருப்பதாக இல்லை. கடந்த அறுபது வருடங்களாக இலங்கையில் பாரிய கட்டுமாண அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. வேலை வாய்ப்பு ஒரு பிரச்சினை. குடும்பப் பெண்கள், இளம் பெண்கள் தமது வாழ்க்கையை மேம்படுத்த வெளிநாடு செல்கிறார்கள். இதனால் அங்கு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய எந்த யோசனையும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.*

*உள்ளூர் வருமானம் மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகளைக் கொண்டுசில திட்டங்களை முன்னெடுத்தாலும், உயர் கல்வி வேலைவாய் பின்மை வாழ்க்கைச் செலவு உயர்வு பல்வேறு நிலைகளிலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச ஊழியருக்கு பாரிய நன்மை கள் ''பட்ஜெட்டில்'' இடம் பெற்றதாக இல்லை எனக் கருதுகிறேன்.*

**எஸ்.சிவப்பிரகாசம்**
*(அரசாங்க ஊழியர், பருத்தித்துறை)*

*வழமையானவரவு - செலவுத்திட்டத்திலும்பார்க்க இது சற்று வித்தியாசமானது என்றே நினைக்கிறேன். விவசாயம் மற்றும் பால் உற்பத்திகளுக்குக் கணிசமான நிதி கிடைத்துள்ள தால் அடி மட்டத்தில் உள்ள மக்களுக்கு நன்மையுண்டு. எரிபொருளுக்கான 10 வீத வற்வரி குறைப்பு ஆறுதலாக*

**குடாநாட்டு மக்களுக்கு விசேட ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம்...**

*இருக்கும். அரசாங்க ஊழியருக்கு அதிகரிக்கப்பட்ட தொகை நம்பிக்கையூட்டக்கூடியது. யுத்தச் செலவினங்கள் கூடுதலாக உள்ளது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகச் சொல்லி அதற்கு அதிகப்படியான தொகையை ஒதுக்கியது தமிழ் மக்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் ஒன்று. மற்றப்படி கிராமிய பொருளாதாரத்தில் அக்கறை கொண்டுள்ளதாகவே வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது. என்பது எனது கருத்து.*

**வண.ஸ்ரீபன் அருளம்பலம்,**
*(புனித யாகப்பர் ஆலயம், யாழ்ப்பாணம்).*

*மக்களின் வாழ்க்கையில் இன்று காணப் படும் கஷ்டங்கள் தீரக்கூடியதாக அரசின் மூன் றாவது வரவு - செலவுத் திட்டத்தில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயுதக் கொள்வனவுக்காகவே தயாரிக்கப்பட்ட [illegible] மக்களுக்குப் பெரிய அளவில் நன்மைகள் இல்லை.*

**திருமதி இ. கௌரி**
*(குடும்பப் பெண்,யாழ்ப்பாணம்).*

*யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே சகல பொருள்களும் அதிகரித்த விலைகளிலேயே கிடைக்கின்றன. மண்ணெண்ணை மற்றும் எரிபொருள் களின் விலை வரவு - செலவில் அதிகரிக்கப்பட வில்லை என்றாலும் அவையெல்லாம் இரண்டு தடவைகளுக்குக் கூடுதலாக முன்னதாகவே உயர்த்தப்பட்டுள்ளன. பாலின் விலை அதிகரிப்பால் பால் மாவின் விலைகள் மேலும் உயரலாம். இப்போது ரூபா 280,ரூபா 300க்கும் இவைகள் கிடைப்பதில்லை. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய யோசனைகள் தெரிவிக்கப்படவில்லை. கூடுதலான பிள்ளை களைக்கொண்ட குடும்பத்திற்கு உகந்த வகையில் நிவாரண உதவிகள் எதுவும் வழங்கப்பட்டதாக இல்லை. அரச ஊழியருக்குச் சிறுதொகை கூடியுள்ளது. ஓய்வூதியர்கள் பற்றிஎது வுமேகூறப்படவில்லை.*

*யுத்த முனைப்புடன் காலத்தை ஓட்ட அரசு தீர்மானித்துள்ளது போலவும் அதன் மூலம் தனது தமிழர் மீதான விரோதப் போக்கையும் இந்த 'பட்ஜெட்' மூலம் சர்வதேசத்திற்கும் எடுத்துக் காட்டியுள்ளதாகவே எண்ணமுடிகின்றது.*

**பேராசிரியர் எஸ். சிவநாதன்**
*(பொருளியல்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்)*



*இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பொருளாதார உற்பத்தி மட்டத்தை உயர்த்துவதற்கான வர்த்தக நடவடிக்கைகளை முன் நகர்த்துவதற்கான திட்டங்கள் இருப் பதாக இல்லை. இந்த வரவு - செல வுத்திட்டத்தின் நோக்கங்கள் இலங் கையின் சகல பிரதேசங்களிலும் நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகமே. பயங்கரவாதத்தை ஒழிக்க முன்னுரிமை அடுத்த நிலைக்கே பொருளாதார நடவடிக்கை என்று [illegible] அரசு செயற்படுமானால் வடக்கு, கிழக்கு பகுதிகள் அரசின் வரவு- செலவுத் திட்ட நிகழ்ச்சி நிரலில் இருந்து வேறுபட்டதாகவே இருக்கும். வடக்கு, கிழக்கில் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டின் பணவீக்கம் 20 வீதம் என்றால் இந்த இருபகுதிகளில் அது 40 வீதத்தை தாண்டி விட்டது!*

*இந்த இரு பிரதேசங்களும் வரவு - செல வுத் திட்ட பருநிலைப் பொருளாதார பிரதேசத் தில் இருந்து விடுபட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது. பிரதேச ரீதியான விலை வேறுபாடுகளும், உற்பத்தி தடைகளும், போக்குவரத்து கடல் வலய கட்டுப்பாடுகளும், போர்முனைப்புகளும் வரவு- செலவுத் திட்டத்தின் பரவலான விளைவுகளைத் தடுத்துவிடும்.*

*வரவு - செலவுத் திட்டம் தேசிய ரீதியில் ஏற்படுத்தப் போகும் விளைவுகளை நோக்கும் போது உண்மைப் பொருளாதார வளர்ச்சி விகி தமும் பொருளாதார அபிவிருத்தி மட்டமும் ஸ்தம்பிதமடைந்து உட்சுருளும் பொருளாதாரமாக (Economic Involution) மாறிவிடும் தன்மையே இந்த வரவு - செலவுத்திட்டத்தால் உருவாகப் போகிறது என்ற பீதி ஏற்பட்டுள்ளது.*

**ச. கணேசமூர்த்தி**
*(விவசாயி கோப்பாய்)*

*வரவு - செலவுத் திட்டம் குறித்து பெரிதாக என்னால் எதுவும் கூறமுடியாது. விவசாயிகளுக்கு நன்மை இருப்பதாகவும் உரம் மண்ணெண்ணை போன்றவை குறைந்த விலைக் குப் பெறக்கூடியதாக உள்ளதாகவும் கூறப் படுகின்றது. ரூபா 4000/= இற்கு வாங்கப்படும் உர மூடை ரூபா 350 இற்குக் கிடைக்கும் என்கிறார்கள். தென் பகுதியில் விவசாயிகளுக்கு இந்தப் பட்ஜெட்டால் நன்மை இருக்கிறதோ இல்லையோ எங்களைப் போன்ற விவசாயிகள் பெரும் பாலானவர்கள் தமது விவசாய நிலங்களையே இழந்துள்ள நிலையில் இந்த 'பட்ஜெட்' எங்களுக்கு என்ன பயனைத் தரப்போகிறது?*

**எஸ்.கே.சண்முகரத்தினம்**
*(அதிபர், புங்குடுதீவு).*

*மண்ணெண்ணைக்குக் குறைந்த அளவு மானியமே ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு தயாரிக்காமல் 'பட்ஜெட்' தயாரிக்க வேண்டும் என்பதற்கான ஒரு கண்துடைப்பு நடவடிக்கைதான் இது. சாதாரண ஏழை மக்களைப் பாதுகாக்கும் ஒன்றாக அரச சார்பில் கூறப்பட்டாலும் மக்களுக்குக் கஷ்டத்தில் இருந்து விடிவு தரும் ஒன்றாக இந்தப் 'பட்ஜெட்'டைக் கருதமுடியாது.*

**சந்திப்பு - நம்பி**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சீரற்ற மின்சார....

( 9 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### ஏன் இந்தப் பாரபட்சம்

*இந்த மின் வெட்டுத் தொடர்பாக ஊரெழு கிழக்கைச் சேர்ந்த சி. கண் ணன் கூறியதாவது:-*

ஊரெழு பிரதேசத்தில் கடந்த ஒரு வருடமாக மின் வெட்டு சர்வசாதாரண மாகிவிட்டது. கடந்த ஜி.சி.ஈ. சாதாரணப் பரீட்சைக் காலத்தில் ஆரம்பித்த மின் வெட்டு இப்போதும் தொடர்கிறது. தற் போது மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணிவரை இந்த மின்வெட்டு மேற்கொள் ளப்படுகிறது. இது குறித்து சுமார் 10 இற்கு மேற்பட்ட தடவைகள் எழுத்து மூலமும், தொலைபேசி வழியாகவும்,நேரடியாகவும் மின்சாரசபை யுடன் தெடர்பு கொண்டும் விமோசனம் இல்லை. இதேவேளை உரும் பிராய், கோண்டாவில் பகுதிகளில் மின் வெட்டு இல்லை. அப்படி அமுல்படுத் தப்பட்டாலும் அந்த மின் வெட்டு நேரம் மிகக் குடிறைவு (1/2மணித்தியாலம்). எமக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்சம். சுழற்சி முறையில் மின் வெட்டு என்றால் அனைவருக்கும் சமமான முறையில் அல் லவா மேற்கொள்ள வேண்டும். தினமும் மேற் கொள்ளப்படும் மின் வெட்டை சுழற்சி முறை என்று கூற முடியுமா? என்று கேட்டார் அந்த மாணவன்.

*இளவாலையைச் சேர்ந்த எஸ். அன்ர னிதாஸ் தெரிவிக்கையில் -*

பிள்ளைகளின் கல்வியைச் சீர்குலைப் பதற்கான சதி நடவக்கையா இது என எண்ணத் தோன்றுகிறது. மின் வெட்டு என்பது ஒரு முறையான அறிவித்தலின் பிரகாரம் மேற்கொள் ளப்பட வேண்டியது. கண்ட கண்ட நேரம் எல்லாம் நினைத்த நினைத்த போதெல்லாம் இப்போது அது நடக்கிறது. அரச நிர்வாகம் குடாநாட்டில் எவ்வாறு மக்களுக்குச் செயலாற்றுகிறது என்ப தற்கு இந்தமின் வெட்டு சிறந்த உதாரணம் - என்றார்.

*சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.சீலன் சொல்கிறார்:*

இரவு நேரங்களில் மின் வெட்டு மேற் கொள்ளப்படுவது குறித்து மின்சார சபை வடமாகாண உயர் அதிகாரிகளோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டாலும் தக்க பதில் கிடைப்பதில்லை. மின்சார சபை உயர் அதிகாரிகளாக உள்ள சிலரின் பிரதேசங்களுக்கு 24 மணி நேர மும் மின்சாரம் வழங்கப்படுகின்றது. எல்லாப் பிரதேச மக்களையும் ஒரே விதத் தில் பார்க்கும் மனோபாவம் எப்போது இந்த உயர் அதிகாரி களுக்கு ஏற்படுகிறதோ அப்போதுதான் எந்த விடயத்திலும் தக்க பயன் எல்லோருக்கும் பரவ லாகக் கிடைக்கும் - என் றார்.

மின் வெட்டுத் தொடர் பாக 'உதயனு'க்கு நாளாந்தம் பல்வேறு முறைப்பாடுகள் வந்து குவிந்த வண்ணமுள்ளன.

### அதிகாரிகளின் மௌனம் கலையுமா?

தொடர்ந்து மௌனமாக இருந்து வரும் குடாநாட்டு மின்சார சபை அதிகாரிகள் தமது மௌனப் போக்கைக் கைவிட்டு மின் வெட் டுக்கான காரணத்தை மக்களுக்கு வெளிப் படையாகத் தெரிவிக்க வேண்டும்.

ஒளித்து மறைத்து விளையாட இது என்ன கண்ணாமூச்சி ஆட்டமா? மக்கள் அனைவருக்கும் சமமான முறையில் மின் வெட்டு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். பாராபட்சம் இருக்கக்கூடாது. குடாநாட்டு மக்களுக்கு அனைத்து வசதி களும் செய்திருப்பதாகக் கூறிவரும் அரசும் இந்த மின்வெட்டை நீக்குவதற் கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

நொண்டிச் சாட்டுகளுக்கு உள்ளார்ந்த காரணங்கள் உண்டா என்ற சந்தேகம் மக்களிடையே வலுத்து வருகிறது. ✱


## யோகம் தரும் இயற்கை வைத்தியம் (இயன் மருத்துவம்)

✱ பல சிகிச்சைகள், வைத்தியசாலைகளால் கைவிடப்பட்ட பல நோயாளர்கள் குணமடைய வைக்கப்பட்டுள்ளனர்.

✱ மாறாத தலை விறைப்பு, தலையிடி, தலைச்சுற்று, தலை அம்மல், மறதி, நித்திரையின்மை, மூச்சுத்திணறல், இழுப்பு, கழுத்துப் பிடிப்பு, உளைவு, கைகுத்துவேதனை, முதுகுவலி, முதுகு வளைக்க இயலாமை, முதுகு விட்டு விட்டுக் குத்துதல், மூட்டுக்கள் தேய்மானம், நெஞ்சுவலி, மனஇறுக்கம், வயிற்றுப் போக்கின்மை, வயிறு இறுக்கம், ஊதல், மலம்கறுப்பு நிறமாதல், சமிபாடின்மை, கால்விறைப்பு, தசைப்பிடிப்பு இன்னும் பல நோய்களைக் குணமாக்கும் அதிசய சிகிச்சை.

தைமாதம் தொடக்கம் தங்கும் வசதி உண்டு. முன்பதிவுகள் செய்து கொள்ளலாம்.

T.P.: 077 9112969
077 6244880

**ரெய்கி யோகா வைத்தியம்,**
(67778) சாரையடி, பருத்தித்துறை.


## 2ஆவது ஆண்டு நினைவலைகள்

மொட்டாக
29
★
11
★
1996



உதிர்வாக
11
★
11
★
2005

### தேவராஜா கிருஷிக்கா (அம்மன்)

(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி)

சந்ததிக்கு ஏங்கிய நாம் சந்தனத்தேர் உன்வரவால்
நந்தவனக் கனவுகளில் நடைபயில "அம்மன் நீ"
சொந்தத்தை விட்டேனோ சொல்லாமல் போய் விட்டாய்
"கிருஷிக்கா" என்று பெயர் கொண்ட நீ
மீண்டும் "கிருத்திகா" என்ற பெயருடன்
எங்களிடம் வந்துதித்து விட்டாய்.

*"லிங்கவாச",*
*உடுப்பிட்டிச் சந்தி,*
*உடுப்பிட்டி.*

(67776) அப்பம்மா, அம்மம்மா,
அப்பா, அம்மா, தங்கை


## வீடு விற்பனைக்கு

கம்பஸ் லேன், திருநெல்வேலியில் அமைந்துள்ள அண்ணளவாக 1¼ பரப் புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக் குண்டு.

தொடர்பு: *இல.41, கம்பஸ் லேன், திருநெல்வேலி.* T.P.: **077 4007281**

## வீடு விற்பனைக்கு

இல: 9, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண் ணையில் அமைந்துள்ள ஒரு பரப்பும் 3 குழியும் கொண்ட காணியுடன் வீடும் சீவல் 10" 12" சைபினா பட்டறையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:
**வெ.இருதயராஜன்,**
இல:145, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகில்)
(67799)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 12.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

✱ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
✱மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
✱P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
✱கோல்டன் பாம் - பருத்தித்துறை
✱திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி
✱சிவம் ஸ்ரோர்ஸ் - ஏழாலை.

T.P.NO 222 2867
222 3529
(67800)

## LEARN FRENCH THE FRENCH WAY
## பிரெஞ்சு மொழி வகுப்புகள்

**"யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சு மொழி கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்"**

பிரெஞ்சு மொழி கற்க ஆர்வமுடைய அனைவருக்குமான (மாணவர்கள், ஆசிரி யர்கள்,தொழில் புரிவோர், ஆர்வமுள்ளோர்) புதிய வகுப்புகள் (17.11.2007) சனிக்கிழமை அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

கட்டணம் மற்றும் ஏனைய விவரங்களை நேரில் அல்லது தொலைபேசியின் ஊடாக கேட்டறியலாம். பதிவுகளை இன் றிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ஆங்கில அறிவு அவசியமில்லை)

Alliance Francaise de Jaffna
83, Palaly Road,
Kantharmadam, Jaffna, Srilanka
Phone: 021.2228093
Email: alliancejaffna @ yahoo.com
(67783)

## டுபாயில் வெற்றிடங்கள்
## யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

### விதிகளும் நிபந்தனைகளும்

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்டு(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் இருவழி விமானப் பயணச் சீட்டு வழங்கப்படும். தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

✱ வங்கிக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் நவம்பர் 6 லிருந்து 20 வரை
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

✱ உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

**அராபியன்றோயல்குறூப் (பிறைவேட்) லிமிடெட்**
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிகேஷன் றோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :2370653, 2502719
(பேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

01. மருதமுனை - 03. தொலைபேசி: 077-6968684/077-9027572
02. ஆரையம்பதி - 01. தொலைபேசி: 077-9911503/065-2247715
03. பெரியபோரதீவு(பம்மியடியூற்று) தொலைபேசி: 077-5000474/065-4921964
04. மருதமுனை - 04. தொலைபேசி: 077-7405996/067-2220877
05. கிரான்குளம் -08. தொலைபேசி: 077-5024029/060-2641572
06. சூராவத்தை. தொலைபேசி: 077-524554/072-3405643
07. [illegible]
தொலைபேசி: [illegible]


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2007ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161புள்ளிகள் பெற்றுசித்தியடைந்த மாணவி*

### செல்வி வி.கஜன்சிகா

*உடுவில் கோட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 2007 இல் 16 வயதுப்பிரிவு, 18 வய துப்பிரிவு - முதலாம் இடம் பெற்றமைக்கும், வலயமட்டப் போட்டியில் 18 வயதுப்பிரிவு 3 ஆம் இடம் பெற்ற மைக்கும், இவர்களுக்குப் பயிற்சி அளித்த பயிற்றுனர், மற்றும் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன், இன்றைய பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின் றோம்.*

**ஸ்ரீமுருகன் வித்தியாலய ஸ்தாபகர்**
குருநாதி மூத்தவி குடும்பத்தினரும்,
முன்னாள் அதிபர் அமரர் மூ. வைரவநாதன் குடும்பத்தினரும்.
(67791)

## மரண அறிவித்தல்கள்

### *மாணிக்கம் துரையப்பா (நடராஜா)*

**(இளைப்பாறிய ஊழியர் இலங்கை மின்சார சபை)**



44, கச்சேரி கிழக்கு ஒழுங்கையை பிறப் பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா என்று அன்பாக அழைக்கப் படும் மாணிக்கம் துரையப்பா 09.11.2007 வெள்ளிக்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்ற தில்லையம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலைச்செல்வி, ஹேமச்சந்திரன், பிறேமச்சந்திரன், தவச்செல்வி ஆகியோரின் அன் புத் தந்தையும், பாஸ்கரன், கணேசபாலன், வேஜனா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, இரத்தினம், துரைசிங்கம் மற்றும் இராசமணி, பாலசிங்கம், தவமணி காலஞ் சென்ற குணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸ்லாந்தில் நடைபெறும். விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

*44, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*அரியாலை.*

தகவல்
ஈசா (தவச்செல்வி - மகள்)
(67795)

### தங்கராசா சுஜாஜினி



சாவகச்சேரி, சங்கத்தானை பெரிய மாவடி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தங்கராசா சுஜாஜினி (08.11.2007) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தங்கராஜா - மகேஸ்வரி தம்பதி யரின் பாசமுள்ள மகளும் தினேஸ்குமார், கஜந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலம்சென்ற நவரட்ணம் மற்றும் புனிதவதி, சந்திரகுமாரன், கைலேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகளும், தவராசா (லண்டன்), கேதீஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற நகுலேஸ் வரன், தர்மலிங்கம் மற்றும் விசாலாட்சி ஆகியோரின் மருமக ளும், ரஞ்சித்குமார், விதூசிகன், தனூசிகன், தீபிகன், கதிர்காம நாதன் ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும், கமலினி, தர்மபூபதி, தர்மபாலன், தர்மராஜா, பரமேஸ்வரன், தர்மேஸ் வரன், தர்மகடாட்சம், ஜெனோஜன், நகுமிலன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் இராசம்மா காலஞ்சென்ற வல்லிபுரம் தில்லையம்மா ஆகியோரின் பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல் லாரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பெரிய மாவடி வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

தகவல்
குடும்பத்தினர்.

### *சுந்தரம்பிள்ளை சபாநாயகம்*

(ஓய்வு பெற்ற ஊழியர், தகவல் திணைக்களம்)



புலோலி, முதலாம் கட்டையைப் பிறப் பிடமாகவும் சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை சபாநாயகம் 2007.11.09 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசம் மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் சௌந்தரம்மா, சரஸ்வதியம்மா, சபாபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் நாகேஸ் வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் மைத் துனரும் புஸ் பராணி, பிறேமராணி, குணரட்ணம், ராஜரட்ணம், தவரட்ணம், பாலராணி(தங்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணே சாணந்தன், இம்மானுவேல், கோமதி, விமலாவதி, வசந்தா, ஜெகன் மோகன் ஆகியோரின் பிரியமுள்ள மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'இராச சபா',**
**சூராவத்தை,சுன்னாகம்.**

(67798)

தகவல்:
**ச.இராசம்மா** (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நெருப்பாற்றைக் கடக்கும் நீச்சலில் இன்று ஊடகங்கள்

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மிக நெருக்கடியான - இக்கட்டான - மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இச்சமயத்தில் அதன் விளைவாக மோசமான சிக்கலுக்குள் மாட்டியிருப்பது ஊடக சுதந்திரம்தான்.

'போரில் முதலில் சாவது போர் வீரனோ, பொது மகனோ அல்லன். முதலில் சாவது உண்மைதான்!' - என்று கூறுவார்கள். உண்மை தப்பிப் பிழைத்து வெளியே வந்து விடக்கூடாது என்பதற்காக முதலில் அதனைப் பிரதிபலிக்கும் ஊடகங்களின் குரல் வளைகள் நசிக்கப்படுகின்றன.

அத்தகைய இக்கட்டான ஒரு சூழ்நிலை இலங்கைப் போரியல் நிலைமையால் இங்கு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக ஊடகச் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தை இன்னும் முனைப்போடு - முழு வீச்சோடு - முன்னெடுக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

இதனாலேயே இலங்கையில் தேசிய ரீதியில் செயற்படும் ஊடகவியலாளர்கள் அமைப்புகள் தமக்குள் ஒன்றுபட்டுள்ளதோடு, கருத்துச் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்காகச் சிவில் அமைப்புகள், தொழிற்சங்கள் போன்ற வெகுஜன நிறுவனங்களையும் கூட்டிணைத்துக்கொண்டு இதற்கான போராட்டத்தில் குதித்திருக்கின்றன. கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான சிவில் செயற்பாட்டு அமைப்பே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

ஊடகங்களின் குரல்வளையை நசித்து, அவற்றைக் கட்டுப்படுத்தி அடக்குவதன்மூலம் பிரசார யுத்தத்தில் தற்காலிக வெற்றிகளை வேண்டுமானால் எட்டிவிட முடியும். ஆனால் உண்மையை மூடி மறைத்து, பொய்ப் பிரசாரங்கள் மூலம் நிரந்தர வெற்றியை ஈட்டி விடலாம் என யாரும் கருதுவார்களேயானால் அது தவறாகும்.

ஒரு பக்கக் கருத்தை முடக்கி, தான் விரும்பியதை - தனக்கு விருப்பமானதை - மட்டும் வெளியிடும் பிரசார யுத்தம் மூலம் போரில் ஒரு தரப்பினால் வெற்றிபெற முடியுமானால், இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரினால் வெற்றியீட்ட முடிந்திருக்கும்.

பிரசார யுத்தம் வேறு; உண்மையான போரியல் யுத்தம் வேறு. அதற்கு ஹிட்லர் நல்லதொரு உதாரணமாக அமைகிறார். நுணுக்கமான - மதிநுட்பமான - பிரசாரத் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி பிரசார யுத்தத்தில் வெற்றிக்கொடி நாட்டிய ஹிட்லரினால் உண்மையான போரியல் யுத்தத்தில் இறுதி வெற்றியை எட்டமுடியவில்லை.

'நாட்டின் தேசிய முக்கியத்துவம்' என்ற பெயரில் இலங்கையில் ஊடக சுதந்திரம் மிதிக்கப்படுகின்றது. அரசியல் தலைமைகளின் விருப்பு - வெறுப்புகளுக்கு அமைய, அவற்றைத் திருப்திப்படுத்துவதற்காக இங்கு ஊடக சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது.

ஈரானில் பிரித்தானிய இராணுவத்தினர் உள்ளூர் சிறைக் கைதிகளை மோசமாகச் சித்திரவதை செய்தமை, மிகக் கேவலமாக நடத்தியமை, கொடூரமாகச் செயற்பட்டமை போன்றவை குறித்து பல்வேறு உள்வீட்டு விடயங்களை அம்பலப்படுத்தி பிரிட்டிஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அப்போது பிரிட்டிஷ் ஊடகங்கள் தமது அரசுக்கு எதிராகச் செய்திகளை வெளியிட்டு தேசத்துக்கும் தேசியத்திற்கும் விரோதமாகச் செயற்படுகின்றன என அப்போதைய பிரிட்டிஷ் அரசோ பிரதமரோ குற்றம் சுமத்தவில்லை. இடம்பெற்ற தவறுகளுக்காக அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் பகிரங்க மன்னிப்புக் கோரியது மட்டுமல்லமால் தவறிழைத்த குற்றவாளிகளுக்கு எதிராக விசாரணை நடத்தி சட்ட ரீதியாகத் தண்டிக்கவும் தவறவில்லை.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பிணக்கு பெரும் உள்நாட்டுப் போராக வெடித்திருக்கின்றது. இச்சமயத்தில் தேசிய இனங்களை- அவற்றின் நீதி, நியாயமான அபிலாசைகளை - அந்த இனங்களின் அவலநிலை மற்றும் வாழ்வியல் நெருக்கடிகளை - பிரதிபலிக்கும் ஊடகங்களுக்கு அந்த விடயங்கள் தொடர்பாகக் கடமையும் பொறுப்பும் ஆழமாக உள்ளன. வரலாற்றுத் திருப்புமுனையில் தமது இனத்துக்குரியதைப் பெற்றுக் கொடுத்து, உறுதிப்படுத்தி, நிலைநாட்டுவதில் அவற்றின் பங்கு பணி அளப்பரியது. அப்பொறுப்பை இலங்கைத் தீவின் 'தேசியம்' என்ற பெயரால் மூடி மறைத்து, ஒதுக்கிவிட முடியாது. குறிப்பாக சிறுபான்மையினரான தமிழர்களின் தேசியத்தின் எழுச்சியைப் பிரதிபலிக்கின்ற ஊடகங்களுக்கு இது வரலாற்றுக் கடமையைப் பொறுப்பேற்று பணிபுரிய வேண்டிய காலம்.

இந்த வரலாற்றுக் கடமையை அவை புரியும்போது ஊடக சுதந்திரத்துக்கு எதிரான சட்டவலைக் கயிறுகள் அவற்றின் மீது பாயலாம்; பாய்கின்றன. கொந்தளிப்பான நிகழ்வுப் போக்குகளுக்கு மத்தியில் ஊடகங்கள் எதிர்கொள்ளும் இக்கட்டான - மிக நெருக்கடியான - காலகட்டம் இது. இதனைத் தாண்டுவது ஊடகங்களுக்கு - குறிப்பாகத் தன் இனத்தின் அபிலாசைகளையும், விருப்புகளையும் அப்பட்டமாக சர்வதேசத் துக்கும் முரசு அறைகின்ற தமிழ் ஊடகங்களுக்கு - நெருப்பாற்றை நீந்திக் கடக்கும் அளவு நெருக்கடி மிகுந்தது.

ஊடக அமைப்புகள் ஒன்றுபட்டு பொது அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கி இருக்கும் 'ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அமைப்பு' இந்த நெருப்பாற்று நீச்சலில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் கணிசமான பாதுகாப்பைப் பெற்றுத் தரும் கேடயமாக விளங்க வேண்டும்.

## உங்களின் மருத்துவப் பிரச்சினைகளை எழுதி வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுங்கள்

உங்கள் மருத்துவம் சார் வினாக்களுக்கு அந்தந்தத் துறைகளில் அனுபவும் மிக்க வைத்திய நிபுணர்களால் பதிலளிக்கப்படும்.

(குறிப்பு: உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.)

உங்கள் கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் எதிர்வரும் ஞாயிறு தொடக்கம் உங்கள் உதயனில் பிரசுரமாகும்.

வினாச் சேகரிப்பு பெட்டிகள் நிறுவப்பட்டுள்ள இடங்கள்:- யாழ். போதனா வைத்தியசாலையின் கிளினிக், இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக பிரதான தொகுதி, மருத்துவபீடம், நுண்கலைப் பீடம்

யாழ்ப்பாணம் - இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம்.

"மருத்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

சாவகச்சேரி - இந்துக் கல்லூரி, டிறிபேர்க் கல்லூரி, மகளிர் கல்லூரி.

பருத்தித்துறை -ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி அல்லது கீழ் கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்பு கொண்டும் உங்கள் வினாக்களை பதிவு செய்யலாம்.

மருத்துவ ஆலோசனை
மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
தொ.பே. 0777179268

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.11

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவசமயப் பாடத்தேர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் காரைநகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இடம்பெறுகிறது.

தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இப்பரீட்சைகளில் அதிஉயர் பேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் பரிசில்களும் ஈழத்துச் சிதம்பரத்தில் அடுத்த மாதம் இடம்பெற உள்ள திருவாசக திருவிழாவில் வழங்கப்படும் என்று பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் தெரிவித்தார். (1-250)

* * *

யாழ்ப்பாணம், நவ.11

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கழக ஆரம்ப கால உறுப்பினர் டாக்டர் பெ.பிலிப்ஸ் நினைவாக மட்டுவில் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நடத்தவுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்த முகாம் நடத்தப்படவுள்ளது.

மட்டுவில் வடக்கு, மட்டுவில் மத்தி, மட்டுவில் கிழக்கு, சந்திபுரம், சரசாலை, கல்வயல் ஆகிய பிரிவு மக்கள் பரிசோ தனை முகாமில் கலந்து கொள்ளலாம்.

கண், சலரோகம், இரத்த அமுக்கம், வாய்ப்புற்று, பெண்நோயியல், சர்ம வியாதி, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படும். (1-207)

* * *

வலி வடக்கு,நவ.11

வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனமும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனமும் இணைந்து இன்று காலை பண்டத்தரிப்பு கிராம வைத்தியசாலையில் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளன. கரித்தாஸ் கியூ டெக் நிறு வனப் பணிப்பாளர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் இந்நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனம், கரித்தாஸ் - கியூடெக் தொண்டர்கள் 75 பேர் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 26 | திங்கட்கிழமை 12.11.2007 |
| திதி : துதியை | காலை 8.27 |
| நட்சத்திரம் : | கேட்டை பின்னிரவு : 05.54 |
| சுபநேரம் | : 12.06 - 01.36 |
| ராகுகாலம் | : 07.36 - 09.06 |

## எங்கள் புலமை மரபின் இமயம்
## பேராசிரியர் அ.துரைராஜா



மேலான வாழ்வில் நிறைந்தவர்கள், மரணமில்லாப் பெருவாழ்வில் போற்றப்படுகின்றார்கள். இந்த வகையில் எங்கள் புலமை மரபின் இமயமென அறிவுத்துணிவுடன் தன் அறிவையும் ஆற்றல்களையும் சமூகத்துக்காக்கி அனைவர் நெஞ்சங்களிலும் வாழும் உன்னத ஆளுமை பேராசிரியர் அ.துரைராஜா.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக காலம் அவரை எமக்காக்கியது. தனித்துவமான தன் வல்லமையால் காலத்தை வென்று நிற்கும் சாதனைகளின் தலைவனாக வரலாறு அவரைப் பதிந்து கொண்டது.

யாழ்ப்பாணத்து மரபுவழிக் கிராமம் ஒன்றின் சாதாரண குடும்பத்தின் பிள்ளையான துரைராஜாவின் அப்பா அழகையா; அம்மா செல்லம்மா; அறிவான பயிர்; இளமையில் இருந்தே ஆற்றலுடன் வளர்ந்து பொறியியல் பட்டதாரியாக இலங்கையின் பல்கலைக் கழகங்களில் ஆசிரியராய், நிர்வாகியாய் உயர்ந்து உலகப்புகழ் பெற்ற லண்டன் கேம்பிறிஜ் பல்கலைககழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் துரைராஜாவைத் துணைவேந்தராகப் பெற யாழ். பல்கலைக் கழகம் கொடுத்து வைத்தது. அன்பின் கனிவான, அதிகாரத்தின் கர்வம் கிஞ்சித்துமில்லாத அவரின் முகாமைத் திறத்தாலே ஆற்றல்கள் அனைத்தும் ஒன்றிணைய நாம்கண்ட பயன்கனிகள் பல. வெறும் வாய்ச் சொல் வீரராக அன்றி உழைப்பின் மகத்துவத்தை உணர்த்தியது அவரது வாழ்க்கை.

அறிவைச் சமூகப் பயனாக்கும் பாதையில் தன் ஊனினை உருக்கி அவர் செய்த பணிகள் காலத்தால் அழியாதவை.

பல்கலைக்கழகங்கள் வெறும் பட்டச் சான்றிதழ்களை வழங்கும் தொழிற்சாலைகள் அல்ல; ஆற்றலும் ஆளுமையயும் மிக்க சமூகப்பயனான, சமூக மேம்பாட்டுக்கான எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் கலைக்கூடங்கள் என்ற உயர்கல்விச் சிந்தனையின் வடிவம் அ.துரைராஜா.

அவரது வாழ்வும் ஆசியும் எங்கள் பணிகளின் வழிகாட்டியாகி, அவர் கனவுகளை நனவாக்கும் பணியில் நியாய மனம் கொண்ட அனைவரும் ஒன்றிணைவோம். நாளைய மேம்பாட்டில் எங்கள் மகானுபவர் துரையின் உயர் நினைவுகளைச் சேர்த்திடுவோம்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.

(அறிவைச் சமூகப்பயனாக்கிய புலமையாளரின் 73 ஆவது பிறந்த நாள் நேற்று நவம்பர் பத்தாம் திகதியாகும்.)

## நம்பிக்கை பிறக்கும்போது சமயமும் பிறக்கின்றது

### ஞாயிறு நற்பிரசாதம்

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதருக்கும் நம்பிக்கை என்பது முக்கியமானது. நம்பிக்கை அற்ற மனிதர்களாய் வாழ்பவர்கள் வாழ்க்கையில் எதையுமே சாதிக்காமல் போய்விடலாம். நம்பிக்கை மனிதனின் தும்பிக்கை என்பார்கள்.

இந்த நம்பிக்கை - என்னால் முடியும் - கடின உழைப்பிற்கு நிகர் எதுவும் இல்லை - முயற்சி திருவினையாக்கும் என்ற மனித நம்பிக்கையில் முதல் தங்கியிருக்க வேண்டும். இதற்கு மேலானதாக இறைவன் ஒருவரே எல்லாம் வல்லவர் - அவரே அனைத்தையும் இயக்குபவர் அவரில் நம்பிக்கை வைத்தால் அனைத்தையும் அடைய முடியும் என்ற இறை நம்பிக்கை இருக்க வேண்டும்.

நம்பிக்கை என்பது காட்டு வழி போன்றது. பாதையே இல்லாத காட்டிலே மக்கள் நடக்க நடக்க பாதை உண்டாகிறது. அது போல வாழ்வில் பிடிப்பு கொண்டு வாழ வாழத்தான் நம்பிக்கை பிறக்கிறது. ஓர் இளைஞன் ஆற்றுக்கு அப்பால் வாழ்ந்து வந்த ஒரு சிறந்த குருவைப் பற்றி கேள்விப்பட்டான் அவரின் போதனையும், வாழ்க்கை நெறி முறையும் அவனுக்கு வெகுவாகப் பிடித்து விட்டது. அவரையே தன் குருவாக வைத்து தன் அன்றாடப் பணிகளை ஆற்றி வந்தான். ஒரு நாள் அந்தக்குருவை நேரடியாகக் கண்டு அவரோடு பேசி இறை அனுபவத்தைப் பெற்று தன் வாழ்வை வளப்படுத்த வேண்டும் என விரும்பினான்.

படகில் ஏறி ஆற்றைக் கடந்து நீண்ட தூரம் நடந்து அவரைப் பார்த்து வணங்கி அங்கேயே தங்கி அவரின் வாழ்க் கையின் நெறிமுறைகளை கற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்தான். குருவோ இப்போது வேண்டாம் போய் சில காலத்தின் பின் திரும்பி வா என்று அனுப்பிவைத் தார்.

இளைஞன் ஆற்றை நோக்கி வந்த போது படகோட்டியைக் காணவில்லை குருவைக் கண்ட மகிழ்ச்சி மனதில் ஏற்பட்ட தெம்பு வாழ்க்கையில் இனி எதையுமே சாதிக்கலாம் என்ற மன உறுதி அவனை வெகுவாய் உந்தியது குருவே வாழ்க என்று தன் குருவின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஆற்றை நடந்து கடந்தான். இதைப் பார்த்தவர்கள் பிரமித்துப் போய் குருவிடம் தெரிவித்தார்கள். குருவிற்கே அதிர்ச்சியாய் இருந்தது எனது பெயரைச் சொல்லி ஒருவன் ஆற்றில் நடப்பதா அப்படி ஆனால் என்னிடம் அவனை விட பல மடங்கு பலம் உள்ளதே என்று ஆற்றில் இறங்கினார். குருவால் ஆற்றைக் கடந்து நடந்து செல்ல முடியவில்லை தடுமாறி விழுந்த போது வெள்ளம் அள்ளிச் சென்று மறு கரையில் தள்ளியது. அங்கு அவர் கண்ட காட்சி அவரைப் பிரமிக்க செய்தது. தான் சந்தித்த தன் குருவைப் பற்றி நம்பிக்கையோடு அவன் பேசிக் கொண்டிருந்தான்.

மனித வாழ்வில் எத்தனையோ விடயங்களைச் சாதிக்கவேண்டும். உள்ளத்து வெறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். மனதின் நினைப்புக்கள் எல்லாம் நடந்து ஆக வேண்டும் என்று மனிதன் எண்ணிக் கொண்டே இருக்கின்றான். இந்த அனைத்து எண்ணங்களும், ஏக்கங்களும், எதிர்பார்ப்புக்களும் நிறைவேற வேண்டுமானால் அவன் மனதில் முதலில் இறை நம்பிக்கையும் அதை உறுதிப்படுத்த மனித நம்பிக்கையும் இருக்க வேண்டும். இந்த நம்பிக்கை தான் வாழ்வில் நீண்ட தூரம் நடந்து செல்ல துணைபுரியும் ஆன்மீக சக்தி இறை நம்பிக்கையோடு தன் நம்பிக்கை இணையும் போது அனைத்துமே முழுமை பெறும்.

நம்பிக்கை பிறக்கும்போது சமயமும் பிறக்கின்றது.

அருட் திரு. ஞானமரியபாப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு

# முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு தீரஆராய்ந்தே முடிவு எடுக்கப்படும்

கொழும்பு,நவ.11

வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதா? எதிர்த்து வாக்களிப்பதா? என்பது குறித்து உடனடியாக முடிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அரசில் அங்கம் வகித்த போதிலும், வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என் றுகட்சியின் முக்கியஸ்தர்கள் தலைமையை வற்புறுத்துகின்றனர். இது பற்றி முடிசெய்வதற் கான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி அம்பாறையில் இடம்பெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தில் சமாதான நிகழ்ச்சித்திட்டத்துக்கு முதன்மைத்துவம் வழங்கப்படவில்லை; யுத்தத்துக்கே முன்னிலை வழங்கப்பட்டுள்ளது என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் தலைமைக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ்மொழி அமுலாக்கம், சிங்கள - தமிழ் ஆசிரியர் நியமனம் போன்ற நம்பிக்கையை கட்டி எழுப்பும் செயற்பாட்டுக்கு கூடுதல் நிதி ஒதுக்கி இனங்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டி எழுப்பி இருக்கலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகையால், வரவு-செலவுத்திட்ட வாக்களிப்பில் அரசாங்கத்தை ஆதரிப் பது குறித்து நன்கு ஆராய்ந்து தீர்க்கமாக முடிவு செய்யவேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் கூறினார். (அ-1)

# நல்லூர் கந்தன் பாமாலை இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.11

வேலணை இறைமணி சி.இராசரத்தினம் அமரத்துவம் அடைந்து ஓராண்டு நிறைவை ஒட்டி அவர் இயற்றிய நல்லூர்க் 'கந்தன் பாமாலை' என்னும் கவிதைகளின் இசையொலி இறுவட்டாக வெளியிடப்படவுள்ளது.

வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த இறுவட்டு அற்புதனின் இசை அமைப்பில் கலாநிதி ந.வி.மு.நவரத்தினம், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ந.பரநதாமன், ந.தனசொரூபன் ஆகியோரின் குரலில் பதிவாகியுள்ளது. (அ-1)

## அநுராதபுர விமானத் தளத் தாக்குதல்

# அரச பிரமுகரின் இணைப்பதிகாரிக்கு சம்பந்தம் உண்டா என்று விசாரிக்கப்படும்

கொழும்பு,நவ.11

அநுராதபுரம் விமானத் தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுடன் அரச உயர் மட்ட பிரமுகர் ஒருவரின் இணைப்பு அதிகாரி ஒருவருக்கு தொடர்பு இருக்கின்றதா என்பது குறித்து குற்றப் புலனாய்வுப் பொலீஸார் விசரிக்க உள்ளனர்.

அரசின் பிரபலஸ்தர் ஒருவரின் இணைப்பு அதிகாரி அநுராதபுரம் விமானத் தள விஸ்தரிப்புப் பணிகளுக்குத் தேவையான மணலை விநியோகிக்கும் கொந்தராத்தை விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கினார் என்று ஏற்கனவே பொலீஸார் மேற்கொண்டிருந்த விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

அதே இணைப்பதிகாரி தெற்கில் ஆடம்பர வாகனங்களை திருடி வன்னிக்கு விற்பனை செய்த குழுவுடனும் தொடர்பு உடையவர் என்றும் சந்தேகிக்கப்படுவதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

விமானத் தளத் தாக்குதல் தொடர்பாக மூன்று குற்றப் புலனாய்வுப் பொலீஸ் குழுக்களும் விமானப்படையின் இரண்டு குழுக்களும் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றன.

அவற்றை விட கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட தலைமையில் உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்தக் குழுவின் அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-1)

# ஐந்து தினங்களுக்கு முன் கடத்தப்பட்டவர் வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.11

சுன்னாகத்தில் வைத்து கடந்த ஐந்து தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கடத்தப்பட்ட இளைஞன், கழுத்து வெட்டப்பட்ட நிலையில் நேற்று சடலமாக ஏழாலையில் மீட்கப்பட்டார்.

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த கணேசன் சுரேஷ் (வயது 22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரணம் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகத்தில் உள்ள வீடியோக்கடை ஒன்றுக்குச் சென்ற இவர், மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் கடத்தப்பட்டிருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய நீதிவான் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

கொலையுண்டவர் அளவெட்டிப் பகுதியில் போலித் துப்பாக்கியைக் காட்டி பல வீடுகளில் கொள்ளைகளில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இவர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அளவெட்டிப் பகுதியில் புகுந்து வீட்டில் இருந்தவரைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்யதாகவும் இவர் மீது வழக்கு ஒன்று தாக்கலாகி உள்ளது.

(அ-1-50-15-78-68-202)

# 3 தொண்டு நிறுவனங்கள் நிதி உதவிகளை நிறுத்தும்

கொழும்பு, நவ.11

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி சார்ந்த திட்டங்களுக்கான நிதி உதவிகளை அடுத்த வருடத்தில் இருந்து நிறுத்துவதற்கு மூன்று சர்வதேச தொண்டு நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன .

கனடாவைச் சேர்ந்த 'சீடா' நிறுவனம், நெதர்லாந்தின் 'டச்' நிறுவனம், ஜேர்மனியைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் ஆகியனவே தங்கள் நிதிஉதவிகளை நிறுத்தவுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிறுவனங்கள் ஏற்கனவே ஒதுக்கீடு செய்த நிதிமூலம் மேற்கொள்ளப்படும் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் எந்தவொரு புதியதிட்டங்களும் தயாரிக்கப்படமாட்டாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## தமிழக கரையோரத்தில் புலிகளின் அதிகரித்த நடமாட்டம்

# இலங்கை அரசின் முறைப்பாடு குறித்து இந்தியா கவனம் எடுக்குமாம்

கொழும்பு, நவ.11

தமிழகக் கரையோரத்தில் விடுதலைப் புலிகளின் அதிகரித்த செயற்பாடுகள் - கூடுதல் நடமாட்டங்கள் - உள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ள முறைப்பாட்டை இந்தியா கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் டிங்கர் அஸ்த்தனா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழகக் கரையோரங்களில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரநாயக்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையைச் சமர்ப்பித்து பேசுகையில் தெரிவித்திருந்தார் .

ஹெலிகொப்டர்களுக்கும் ரிமோட் கொன்றோல் விமானங்களுக்கும் தேவையான உதிரிப்பாகங்கள் ஏற்றிவந்த விடுதலைப் புலிகளின் படகுகளை இலங்கைக் கடற்படையினர் வழிமறித்து கைப்பற்றியதாகவும் அவர் அப்போது சொன்னார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட தூதரகப் பேச்சாளர் இது தொடர்பாக எந்தத் தகவலும் எங்களுக்கு கிடைக்கவில்லை. எப்படி இருப்பினும் இலங்கை அரசுடன் ஆராய்ந்து அவர்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (அ-1)

# வண்ணை கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தஷஷ்டி

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். வண்ணை செந்தில் கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தஷஷ்டி பூசைத் திருவிழா நேற்று ஆரம்பமானது.

தினமும் காலை 7.15 மணி முதல மாலை 4 மணிவரை விசேட நிகழ்வுகள் இடம்பெறும். பிற்பகல் 3.15 மணிக்கு ஷண்முகார்ச்சனை நடைபெற்று, 4மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து முருகப் பெருமான் உள்வீதி வலம்வருவார்.

தினமும் டாக்டர் அ. நவரத்தினம், கந்த ஷஷ்டி விரிவுரை நிகழ்த்துவார். (அ-1)

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப் பினருமான பசில் ராஜபக்ஷ தலைமையிலா உயர் மட்டக்குழு ஒன்று அங்கு சென்று பாதுகாப்பு நிலைமையை விரிவாக ஆராய்ந் தது. (அ-1)

## சமாதானக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானமானவராவார். இந்தப் படுகொலை சமாதானத்துக்கான கதவை அடித்து மூடியுள்ளது. 1994ஆம் ஆண்டுமுதல் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவில் இடம்பெற்றிருந்தார்.

சமாதான முயற்சிகளை முன்நகர்த்த அவரின் கருத்துக்களை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வெளியிட அவரை அழைக்க எமது குழு கடந்த மே மாதம் ஏற்பாடு செய்திருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் வோச், சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் அமெரிக்கா, பிரிட்டன், இந்திய அரசுகள், ஐரோப்பிய நாடாளுமன்றம் ஆகியன இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கும்போது தமிழ்ச்செல்வனின் கொலை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொலையை கடுமையாகக் கண்டிக்கும் அனைத்துக் கட்சிக் குழு 2002 ஆம்ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்து மீண்டும் பேச்சு மேசைக்குத் திருப்பவேண்டும் என்று கோருகின்றது.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவியை இப்போது பிரிட்டனே வகித்து வருகிறது. அந்த ஸ்தானத்தைப் பயன்படுத்தி இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஒன்றை அமைக்க ஐ.நாவின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் - என்றுள்ளது. (அ-1)

## கடற்படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ ரீதியான அணுகுமுறை தீர்வாக அமையாவது என்பதனால் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்றே அமெரிக்கா அரசாங்கத்தை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. - என்றார் அந்தப் பேச்சாளர். (அ-1)

## தமிழ்ச்செல்வனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை இயக்கத்தின் தியாகு உட்பட கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

பெரியார் திராவிடக் கழக ஏற்பாட்டில் இன்று வீரவணக்கக் கூட்டம் கோவையில் இடம்பெறவுள்ளது. (அ-1)

## யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளராக செயற்பட்டேன். அந்தக் காலப் பகுதியில் பெற்ற அனுபவத்தின் அடிப்படை யில் எனது புதிய பணியைத் தொடர்வேன்.

அரசு முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டம் முழுக்க முழுக்க யுத்த நிகழ்ச்சி நிரலுடனேயே வெளியாகியுள்ளது. சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரல் எதுவும் அதில் இல்லை.

இராணுவத்தை வலுப்படுத்தும் - பலப்படுத்தும் - நோக்கத்துடன் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்துக்கு கூடுதல் நிதியை அரசு ஒதுக்கியுள்ளது.

இராணுவத் தீர்வு மூலம் இனப்பிரச் சினைக்கு தீர்வு காணமுடியாது. சமாதானத்தின் மூலமே தீர்வுகாண முடியும் என்ற யதார்த்தத்தை இந்த அரசு உணர்ந்தாக இல்லை.

இன்றைய அரசின்தவறான அணுகுமுறை யாலும் போக்கினாலும் யுத்தம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசின் போக்கு கவலையளிக்கின்றது. - என்றார். (அ-1)

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
12.11.07 (Mon)
Diploma in Computerized Accounting
Diploma in DTP & Graphics Design
Diploma in Computer Hardware

BARGAINING
Sales Offer
நியாய விலையைக்கேளுங்கள்
பொருளைச்
சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்
OFFER Computers Spares
காற்றுள்ள போது
தூற்றிக்கொள்ளுங்கள்
REAL CLEARING OFFER
Our BID, Your ASK
Available Stock Only
Power Tree UPS
ATX/LGA Power Supply
HP Deskjet Printers
HP All in one Printers
(Printer, Photocopy & Scanner)
HP LaserJet Printers,
Canon LaserShot Printers
Canon Lide 25 Scanner
Genius Laptop Scanner
Wireless pointers
Games Devices
Wifi adapters
Mouse pen
Internet phone
DVD Multiplayer
All type of mother boards, Processors, Hard disks, Memories, VGA Cards, Sound Cards, Network Items and etc includes in this OFFER
UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 0773134737

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org